★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 13 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன் 1932 - 2022

வரு. 90 இல. 216 | Tuesday 13, September, 2022 | 12பக்கங்கள் | 40/-




## பொருளாதார நெருக்கடி தீர்வுக்கு கைகொடுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி

### ADB பணிப்பாளர் குழு ஜனாதிபதியுடன் சந்தித்துரையாடல்



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் கெனிச்சி யொகோயாமா (Kenichi Yokoyama) ஆகியோருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நாட்டின் 09

### கல்வி இராஜாங்க அமைச்சராக

## சுரேன் இராகவன் தனது கடமைகளை பொறுப்பேற்பு



பல்கலைக்கழகங்கள் சமுதாயத்திற்கு கணக்கு ஒப்புவிக்கும் இடங்களாக மாற வேண்டும் என உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

உயர் கல்வி இராஜாங்க அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் 09

### ஜனாதிபதி ரணிலின் பாராளுமன்ற உரைக்கு வரவேற்பு;

## பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்து அரசியலமைப்பு மறுசீரமைப்பு

### ஐ. நா. மனித உரிமை பதில் ஆணையாளர் பாராட்டு



இலங்கையில் பன்முகத் தன்மைக்கு மதிப்பளித்து அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளமை தொடர்பில் தாம் மகிழ்ச்சியுறுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பதில் ஆணையாளர் நாடா அல் நசீட் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது முதலாவது பாராளுமன்ற உரையில் அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளமை தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ள 09

### இலங்கையில் சகல மக்களுக்கும் சமவுரிமை, சமத்துவத்தில் முன்னுரிமை;

# ஐ.நாவின் 46/1 தீர்மானத்தை அரசாங்கம் முற்றாக நிராகரிப்பு

### மனித உரிமை பேணல், பாதுகாப்பதில் தொடர்ந்தும் உறுதி




ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள 46/1 தீர்மானம் இலங்கையின் இறையாண்மையை மீறும் வகையில் அமைந்துள்ளதாகவும் அந்த வகையில் அதனை அரசாங்கம் முற்றாக நிராகரிப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

நாட்டில் மனித உரிமைகளை முன்னேற்றுதல், அவற்றைப் பாதுகாத்தல் மற்றும் மனித உரிமைப் பேரவையுடனான எமது ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் பேணுதல் 09



ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார நேற்று தபால் அமைச்சிலுள்ள தமது அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஊடகத்துறை அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவருமான அனுஷ பெல்பிட்ட உள்ளிட்ட முக்கியஸ்தர்களையும் படத்தில் காணலாம்.

### அநுராதபுரம் எரிபொருள் நிலைய உரிமையாளர் ஒருவர்;

## 5000 லீற்றர் மண்ணெண்ணெய்யை பதுக்கிய நிலையில் கண்டுபிடிப்பு

### விற்று பணத்தை நுகர்வோர் அதிகார சபைக்கு வழங்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்

**அநுராதபுரம் ஆனந்த கருணாதாஸ**



எரிபொருள் தீர்ந்துவிட்டதாகவும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர்களுக்கு பொய்களைக் கூறி அதிக விலைக்கு அதனை விற்கும் நோக்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெய் ஒரு தொகை கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நுகர்வோர் விவகார அதிகார சபையால் சீல் வைக்கப்பட்டிருந்த அந்த 5000 லீற்றர் மண்ணெண்ணெய்யை பத்திரிகையில் விளம்பரங்களை வெளியிட்டு விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை நுகர்வோர் விவகார அதிகார சபையின் நிதியத்தில் வைப்பிலிடுமாறு அநுராதபுரம் மேலதிக மாஜிஸ்திரேட் நீதவான் ருத்ரிகா டி சில்வா நுகர்வோர் விவகார அதிகார சபையின் அநுராதபுரம் மாவட்ட தலைவர் பீ.ஏ.சி.பி 09

### மே.09 இடம்பெற்ற வன்முறைகளின்போது

## வீடுகள் சேதமான 74 MPக்களில் 30 பேர் மட்டுமே இழப்பீடு கோரல்



### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளின் போது முழுமையாக எரியூட்டப்பட்ட வீடுகளுக்கு முழுமையான நட்டஈடுகளை பெற்றுக் கொள்வதற்காக முப்பது பாராளுமன்ற உறுப்பினர்களே இதுவரை விண்ணப்பங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளை 09

## உலக வங்கி ஆதரவில் முன்பள்ளி சிறார்களுக்கு பகலுணவு திட்டம்

### இந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படுமென அறிவிப்பு



உலக வங்கியின் ஆதரவின் கீழ் முன்பள்ளி பிள்ளைகளுக்கான பகல் உணவு வழங்கும் நடவடிக்கை இந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என ஆரம்ப 09



## உள்ளூராட்சி மன்ற தேர்தல்; விரைவில் வர்த்தமானி வரும்

30ஆம் திகதிக்கு பின் வெளியாகும் சாத்தியம் 03



## மனித பாவனைக்குரிய அரிசியில் விலங்குகளுக்கு தீவன உற்பத்தி

அநுராதபுரத்தில் பண்ணை ஒன்றுக்கு சீல் வைப்பு 03

### ATM கார்ட் மோசடி மூலம்

## ஐம்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட நிதியை மோசடிசெய்த நபர் கைது 03

## எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள SLPP தயார்

### ரோஹித அபேகுணவர்தன MP தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நிலையான அமைச்சரவையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு முன்னுரிமை வழங்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

பொதுஜன பெரமுனவிற்கு மக்கள் மத்தியில் நன்மதிப்பு உள்ளது. எதிர்வரும் காலங்களில் எத்தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்ளத் தயார் என முன்னாள் 09

### கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு உணவு:

## ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்கான கொடுப்பனவு இம்மாதத்தில் வழங்க தீர்மானம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்த வருடத்தின் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட வேண்டிய 20,000 ரூபா போஷாக்கு உணவுக்கான கொடுப்பனவு இம்மாதத்தில் வழங்கப்படுமென மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த ஜூன் மற்றும் ஜூலை 09

### அரசாங்க ஊழியர் ஓய்வு வயது 60;

## திருத்தம் செய்த அமைச்சரவை பத்திரம் அமைச்சரவைக்கு

### சுற்றறிக்கை இரு வாரங்களில்; டிசம்பரில் 20,000 பேர் ஓய்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்க ஊழியர்களில் ஓய்வுபெறும் வயதெல்லையை 60ஆக திருத்தம் செய்துள்ள அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த 09

## நடிகை தமிதா நேற்று பிணையில் விடுவிப்பு

### 05 இலட்சம் பெறுமதியான 02 சரீர பிணை



விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நடிகை தமிதா அபேரத்னவை 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று (12) உத்தரவிட்டார். 09

## முட்டை, கோழி இறைச்சி விலைகள் உயர வாய்ப்பு

### கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவிப்பு



மின் கட்டணம், நீர் கட்டணம் மற்றும் வரி அதிகரிப்பு காரணமாக கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலையை மீண்டும் உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும் என அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. 09

## மரக்கறி விலைகள் சடுதியாக அதிகரிப்பு

### சீரற்ற காலநிலையே காரணமாம்



கடந்த நாட்களாக நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

இதன்படி, ஒரு கிலோகிராம் போஞ்சி 600 ரூபாவுக்கும் கரட் ஒரு கிலோ 400 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் 09

### மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை;

## வெள்ளவத்தை கடற்பகுதியில் 40 முதலைகள் சுற்றித்திரிகிறது

### உயிர்காக்கும் நிறுவன அதிகாரி தகவல்



வெள்ளவத்தை கடற்பகுதியில் 40 முதலைகள் சுற்றி திரிவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கின்ரோஸ் உயிர்காக்கும் நிறுவனத்தில் பணிபுரியும் திவங்க பெர்னாண்டோ என்பவர் வெள்ளவத்தை கடலில் நீராடும் போது 09

## அத்தியாவசிய பொருட்கள் சில குறைந்த நிறையில் உற்பத்தி

### மோசடி வர்த்தகம் தொடர்பில் மக்களுக்கு எச்சரிக்கை



இலங்கை நாட்டு மக்கள் அதிகமாக பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களை குறைந்த நிறையில் உற்பத்தி செய்து ஏமாற்றும் மோசடி வர்த்தகம் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன. பிஸ்கட், 09

## பப்புவாவில் திருடிய வலம்புரி சங்கு மீட்பு

### விற்க முயன்றவரை STF கைது செய்தது



அம்பாறை பிரதேசத்தில் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகில் வலம்புரிச் சங்கு ஒன்றை விற்பனைக்கு தயாராக வைத்திருந்த நபரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது 09

# மரியன்னையின் வியாகுலத் திருநாள்

செப்.15



**அன்னையின் அருட்திரு**
**வதனம் கண்டால்**
**அல்லல்கள் அகன்று விடும்**
**அவள் கண்களில் மின்னிடும்**
**கருணையை கண்டால்**
**கவலைகள் மறைந்துவிடும்**

என்று திருச்சபையின் தாயும் நம் அன்னையுமான புனித மரியாளை நாம் பாடுகின்றோம்.

அன்பிற்கும் கருணைக்கும் தாழ்ச்சிக்கும் பெயர் பெற்ற புனித மரியாள் தம் வாழ்வில் சந்தித்த துன்பங்களை வியாகுலங்களளை திருச்சபை நினைவு கூருகின்றது.

மரியாளின் வியாகுலங்கள் திருநாளை கத்தோலிக்க திருச்சபை எதிர்வரும் 15 ஆம் திகதி சிறப்பிக்கின்றது.

வியாகுல அன்னையின் திருவிழா 13 ஆம் நூற்றாண்டிலிருந்தே சிறப்பிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த திருவிழா திருச்சிலுவை மகிமை திருவிழாவிற்கு அடுத்த நாளில் கொண்டாடப்பட்டு வருகிறது.



மரியாளின் ஏழு வியாகுலங்களை திருச்சபை முக்கியத்துவப்படுத்தி தியானிக்க அழைப்பு விடுக்கின்றது.

வானதூதர் கப்ரியேலின் வார்த்தைகளுக்கு ஆம்! என தன்னை அர்ப்பணித்து கடவுளின் திருவுளத்திற்கு பணிந்து நடக்கத் தொடங்கிய நாளிலிருந்து இறந்த இயேசுவை அடக்கம் செய்யும் வரை அவர் அனுபவித்த வியாகுலங்கள் சொல்லிலடங்காதவை. எனினும் திருச்சபையானது ஏழு வியாகுலங்களை மட்டும் முக்கியத்துவப்படுத்தி சிறப்பிக்கின்றது.

"முதலாவதாக உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என மரியாளிடம் சிமியோன் கூறும் போது மரியாள் அனுபவித்த வேதனை.

இது லூக்கா நற்செய்தியில் 2:34,35 பகுதிகளில் காணப்படுகிறது.

இரண்டாவதாக ஏரோது குழந்தை இயேசுவை கொல்வதற்கு கட்டளையிடும் போது குழந்தையை தூக்கிக் கொண்டு எகிப்துக்கு தப்பி ஓடும் வேதனை. மரியாளுக்கு இதுவும் ஒரு வியாகுலமே.

மூன்றாவதாக சிறுவன் இயேசு ஆலயத்தில் காணாமற்போதல். அந்த தருணத்தில் தான் ஏதாவது தவறு செய்து விட்டோமோ? அதனால் தான் இயேசு தன்னை விட்டுப் பிரிந்து போய்விட்டாரோ? என மரியாள் பட்ட வேதனை வியாகுலமாக தரப்படுகிறது.

நான்காவதாக ஏசு சிலுவையை சுமந்து செல்லும் காட்சி. ஒரு பாவமும் அறியாத தன்னுடைய மகனுக்கு தீர்க்கப்பட்ட சிலுவைச் சாவு தொடர்பில் மரியாள் அடைந்த வேதனை மிகப்பெரும் வியாகுலம்.

ஐந்தாவது சிலுவையின் அடியில் துணை நின்றது. இதனை யோவான் நற்செய்தி 19 ஆம் அதிகாரம் சிறப்பாக விளக்குகின்றது.

வானத்திற்கும் பூமிக்கும் இடையில் சிலுவையில் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவைப் பார்த்து மரியாள் அடைந்த வேதனை தாங்க முடியாத வியாகுலமே.

ஆறாவது இறந்த இயேசுவின் உடலை தமது மடியில் கிடத்தியமை. தாம் பெற்று வளர்த்த அன்பு மகன் சடலமாக தமது மடியில் கிடத்தப்பட்டதை அவர் நினைத்து படும் துயரம் பெரும் வியாகுலமாகும்.

ஏழாவது இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்தல்.

இறந்த மகனை தாய் அடக்கம் செய்யும் துயரம். எனினும் எல்லாவற்றையும் இறைவனின் சித்தம் என தாழ்மையோடு ஏற்றுக் கொள்கின்றாள்.

மரணம் தான் பரலோகத்திற்கான நுழைவாயில் என்ற ஆழமான விசுவாசம் அவருக்கு இருந்திருக்கும். அதனால் அவள் எல்லா துன்பங்களையும் வியாகுலங்களையும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டார்.

மரியன்னையைப் போல கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற இந்த மண்ணில் துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பதையே மரியாளின் வியாகுலங்கள் திருவிழா நமக்கு உணர்த்துகின்றது.

நாமும் நமக்காக பல்வேறு தியாகங்களை செய்யும் நம் பெற்றோருக்காக குறிப்பாக நமது தாய்க்காக தியாகங்களை செய்வோம். இறை திருவுளத்தை நிறைவேற்ற துன்பங்களை ஏற்போம். அதன் வழியாக இறை அருள் பெறுவோம்.

லோரன்ஸ் செல்வநாயகம்...

## பூமியின் பாதுகாப்பு, போர்களைத் தவிர்ப்பதற்கும் அறிவியல் அறிவு பயன்படுத்தப்படவேண்டும்

திருத்தந்தை பிரான்சிஸ்



நம் பொதுவான இல்லமாகிய பூமியைப் பாதுகாப்பதற்கும் போர்களைத் தவிர்ப்பதற்கும் அறிவியல் அறிவு பயன்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை, பாப்பிறை அறிவியல் கழகத்தினரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பாப்பிறை அறிவியல் கழகம் மூன்று நாட்களாக நடத்திய ஆண்டு நிறையமர்வு கூட்டத்தில் பங்குபெற்ற பிரதிநிதிகளை சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, உலகில் அமைதியைக் கொணர்வதற்கு அறிவியல் முக்கிய பங்காற்ற முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம், தொடர்ந்து இடம்பெற்றுவரும் போர்கள் உட்பட இவ்வுலகம் எதிர்கொள்ளும் மிக முக்கிய பிரச்சனைகளில் சிலவற்றைத் தீர்ப்பதற்கு அடிப்படை அறிவியல் குறித்த அறிவு சிறந்த முறையில் எவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும் என்பது பற்றிய தன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். நம் மனிதக் குடும்பமும் சுற்றுச்சூழலும் எதிர்கொள்ளும் மிகப்பெரும் சவால்களுக்குப் பதிலளிப்பதற்கு உதவும் வண்ணம் உடன்பிறந்த உணர்வு, நீதி, மற்றும், அமைதியின் தேவைகளைக் கருத்தில்கொண்டதாய் அறிவியலில் இடம்பெறும் சாதனைகள் எப்போதும் அமையவேண்டும்.

மனித உரிமைகள், உலகளாவிய சட்டம், ஒருவர் ஒருவரோடு ஒத்துழைப்பு ஆகியவை மதிக்கப்படுவது இவ்வுலகில் அதிகமதிகமாகக் குறைந்துவரும்வேளை, அறிவியல் அறிவு, அமைதியைக் கட்டியெழுப்புவதை ஊக்கப்படுத்துவதாய் இருக்கவேண்டும் என்றுரைத்த திருத்தந்தை இவ்வுலகில் இடம்பெற்றுவரும் மூன்றாம் உலகப் போர் மக்களை பெரும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

மேரி தெரேசா...

கிறிஸ்தவ மஞ்சரி
லோரன்ஸ் செல்வா

## தல்கஸ்வலை புனித அன்னை தெரேசா ஆலய திருவிழா









இலங்கையில் புனித அன்னை தெரேசாவிற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது ஆலயமான காலி மறை மாவட்டத்தில் உள்ள தல்கஸ்வலை புனித அன்னை தெரேசா ஆலயத்தின் பத்தாவது ஆண்டு வருடாந்த திருவிழா கடந்த செப்டம்பர் 4ஆம் திகதி காலி மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ரேமண்ட் விக்ரமசிங்க ஆண்டகையின் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஆலயத்தின் கொடியேற்றம் கடந்த செப்டம்பர் முதலாம் திகதி இடம்பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று 4ஆம் திகதி திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இம்முறை திருவிழா நிகழ்வுகளில் தமிழகத்தின் கார்மேல் சபை தலைவர் அருட்தந்தை நேசமணி அடிகளார் கலந்து கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

பெரும்பாலும் வசதி குறைந்த மக்கள் வாழும் இந்த பிரதேசத்தில் புனித அன்னை தெரசாவின் திருவிழாவை சிறப்பாக நடத்துவதில் பங்குத்தந்தை அருட்பணி அருண் ரெக்ஸ் அடிகளார் பங்கு மக்களுடன் இணைந்து மேற்கொண்ட பிரயயத்தனம் பாராட்டுக்குரியது. நாட்டின் சூழ்நிலை சிறப்பாக காணப்படும் நிலையில் கொழும்பு உட்பட பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் விசுவாசிகள் இம்முறை திருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த 4ஆம் திகதி காலை 9.00 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலி இடம் பெற்று அதனைத் தொடர்ந்து புனித அன்னை தெரேசாவின் திருச்சுரூப பவனி இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**பட உதவி: அருட்தந்தை அருண் ரெக்ஸ்**

# இரக்கம் என்பது இறைவனின் பெயர்

ஞாயிறு வழிபாடு நமக்குப் புகட்டும் பாடம்

இரக்கம் கொண்டு இறங்கி வந்த ஐந்து நபர்களை கடந்த ஞாயிறு வழிபாடு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்த ஐந்து நிகழ்வுகள் அல்லது எடுத்துக்காட்டுகள் சுட்டிக்காட்டும் செய்தி ஒன்றுதான் கடவுளின் பெயர் இரக்கம் என்பேதே

முதல் வாசகத்தில் (விப 32:711,1314) இஸ்ரயேல் மக்கள் பொன்னாலான கன்றுக்குட்டியை வழிபட்டு யாவே இறைவனை ஆண்டவராகிய கடவுளைப் புறக்கணிக்கின்றனர். இது பெரிய பிரமாணிக்கமின்மையாகக் கருதப்பட்டது.

ஆகையால் ஆண்டவரின் கோபம் அவர்கள் மேல் எழுந்து அவர்களைக் கொல்ல நினைக்கிறது. அந்த நேரத்தில் மோசே கடவுளின் உடன்படிக்கையை அவருக்கு நினைவூட்ட, ஆண்டவரின் கோபம் தணிகின்றது. ஆண்டவர் தன்னுடைய எண்ணத்தை மாற்றிக்கொண்டு மக்களுக்குச் செய்யப் போவதாக அறிவித்த தீங்கைச் செய்யாமல் விடுகின்றார். இஸ்ரயேல் மக்கள் செய்த செயலுக்கு ஆண்டவராகிய கடவுள் கோபம் கொள்வது தகுந்தது என்றாலும் அவர் அந்தக் கோபத்திலிருந்து இறங்குகின்றார். அந்த இறங்குதல் அவருடைய இரக்கமாக மாறுகின்றது. இங்கே மோசேயின் பங்கும் முக்கியமானது. ஆண்டவராகிய கடவுளுக்கே அவருடைய நற்குணத்தைச் சுட்டிக்காட்டுபவராக மாறுகின்றார் மோசே.

இரண்டாம் வாசகத்தில் (1 திமொ 1:12 17), திமொத்தேயுவுக்கு எழுதுகின்ற மடலில் தன்னுடைய அழைத்தல் வாழ்வு அல்லது பழைய வாழ்வு பற்றி நினைவுகூறுகின்ற பவுல், 'நான் அவரைப் பழித்துரைத்தேன். துன்புறுத்தினேன். இழிவுபடுத்தினேன்.

ஆயினும் அவர் எனக்கு இரங்கினார்' என்று இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தை, தான் அனுபவித்ததை, கோடிட்டுக் காட்டுகிறார். தொடர்ந்து, 'கடவுள் எனக்கு இரங்கினார் ... பொறுமையைக் காட்டினார்' என்றும் எழுதுகின்றார். பவுலைப் பொருத்தவரையில் இயேசு அவருடைய செயல்களுக்கு ஏற்ப அவரைத் தண்டிக்கவோ கண்டிக்கவோ இல்லை. மாறாக, இரக்கத்தைக் காட்டி அவரைப் புறவினத்தாரின் திருத்தூதராகத் தெரிந்துகொள்கிறார்.

நற்செய்தி வாசகத்தில் (காண். லூக் 15:1 32) இயேசு, பரிசேயரின் முணுமுணுப்புக்கு எதிராக மூன்று எடுத்துக்காட்டுக்களைச் சொல்கின்றார். முதலாவது எடுத்துக்காட்டு ஆடு மேய்க்கும் ஒருவர் காணாமல் போன ஆட்டைத் தேடும் நிகழ்வு. நூறு ஆடுகள் வைத்திருந்த ஒருவர் அவற்றில் ஒன்று காணாமல்போனபோது தொண்ணூற்று ஒன்பது ஆடுகளை விட அந்த ஒரு ஆடுதான் பெரியது என்று எண்ணியதால் அதைத் தேடிக் கண்டு பிடித்து மகிழ்ச்சியோடு தோளில் போட்டுக் கொண்டு தன் நண்பர்களையும் தன்னுடைய மகிழ்ச்சியில் பங்கேற்க அழைக்கின்றார். அவர் காணாமல் போன அந்த ஒரு ஆட்டிற்காக அனுபவித்த எல்லாத் துன்பங்களும் மறைந்து சட்டென்று மகிழ்ச்சியாக மாறிவிடுகிறது. ஆடு மேய்ப்பவர் காணாமல்போன அந்த ஆட்டிற்காக மலைகள், பள்ளத்தாக்குகள் என அனைத்திலும் ஏறி இறங்குகின்றார். அதுவே அவருடைய இரக்கம்.



ஓர் ஆணை உருவகப்படுத்திய லூக்கா நற்செய்தியாளர் தொடர்ந்து ஒரு பெண்ணையும் உருவகப்படுத்துகிறார். பத்து நாணயங்களுள் ஒன்றைத் தொலைத்த பெண், உடனடியாக எண்ணெய் விளக்கை ஏற்றி வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும் வரை தேடி, அதைக் கண்டுபிடித்துத் தோழியரோடு மகிழ்ந்து கொண்டாடுகின்றார். தான் தோழியரோடு மகிழ்ந்து கொண்டாடிய பணம் தொலைந்து போன பணத்தைவிட மிகுதியாக இருந்தாலும் அது பற்றிக் கவலைப்படவில்லை அவர். தான் தொலைத்த திராக்மா கிடைத்ததே அவளுடைய பெருமகிழ்ச்சியாக இருக்கிறது.

## இரக்கம் என்பது இறைவனின் பெயர் இது நம் பெயரானால் இந்த உலகமும் உறவும் இனிக்கும்

'ஒரு தந்தையும் இரண்டு மகன்களும்' எடுத்துக்காட்டில், தந்தை இரண்டு மகன்களையும் தொலைத்துவிடுகின்றார். இளைய மகன் தன்னுடைய சொத்துக்களைப் பிரித்து வாங்கிக் கொண்டு சென்று, தந்தையிடமிருந்து தொலைந்துவிடுகின்றார். மூத்த மகன் தன்னுடைய வேலைகளிலேயே தொலைந்துவிடுகின்றார். இருவரையும் விருந்திற்கு அழைக்கின்றார் தந்தை. மூத்தவர் விருந்திற்குள் நுழைய மறுக்கிறார், தயங்குகிறார். தான் செய்த வேலைகள் அனைத்தும், தான் தந்தைக்குக் காட்டிய பிரமாணிக்கம் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதாக உணர்கின்றார்.

இவர்களுடைய பெயர்கள் இரக்கம் என்றால் என்னுடைய பெயர் இரக்கம் என்றாக நான் என்ன செய்ய வேண்டும்?

இவர்களே இதற்கான வாழ்க்கைப் பாடங்களையும் வரையறுக்கிறார்கள்:

தன்னுடைய இளைய மகன் தன்னுடைய சொத்துக்களைப் பிரித்துக் கேட்டபோது அவனைத் தடுத்து நிறுத்தவோ அவனுக்கு அறிவுரை பகரவோ முயற்சி செய்யவில்லை அந்த ஊதாரித் தந்தை. மகனுடைய முடிவுக்கு மகனே பொறுப்பு என்று கருதினார்.

தன்னுடைய ஆற்றல், நேரத்தைச் செலவழித்து அவனுக்கு முட்டுக்கட்டை போடவில்லை. அல்லது தன்னுடைய வேலைக்காரர்களை அனுப்பி அவனைப் பின்தொடரச் சொல்லவில்லை. 'நான் போகிறேன்' என்று என்று சொன்ன மகனிடம், 'போ' என்கிறார்.

முதல் வாசகத்தில் ஆண்டவராகிய கடவுளும் தன்னுடைய மக்கள் தனக்கு எதிராகத் திரும்பிய போது, அவர்களுடைய முடிவுக்கு அவர்களே பொறுப்பு என்று பொறுமை காக்கின்றார். இரண்டாம் வாசகத்திலும் பவுல் திருச்சபையைத் துன்புறுத்திய போது இயேசு பொறுமை காக்கின்றார். பவுலின் செயலுக்கு அவரே பொறுப்பு என்பது போல அமைதி காக்கின்றார்.

இரக்கத்தின் முதன்மையான பண்பு பொறுமை. அந்தப் பொறுமையில் நான் அடுத்தவரை அவருடைய பொறுப்பில் விட வேண்டும். இரக்கம் என்றவுடன் எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு என்னுடைய மடியில் வைத்து 'நான்தான் எல்லாவற்றுக்கும் எல்லாருக்கும் பொறுப்பு' என்று பதறுவது அல்ல. மாறாக, ஒவ்வொருவரும் முதிர்ச்சி அடைந்தவர். ஒவ்வொருவரும் நன்மைதீமை அறியக்கூடியவர். பொறுமையாக இருந்தால் அல்லவரும் நல்லவர் ஆவார் என்று அடுத்தவரின் செயல்களுக்கு அடுத்தவரே பொறுப்பு என்று பொறுமையுடன் அமர்தல் இரக்கத்திற்காக முதற் பாடம்.

**உன்னுடைய தீமை என்னுடைய நன்மையை ஒருபோதும் பாதிக்காது**

'நீ தீயவனாய் இருக்கிறாய் என்பதற்காக நானும் தீயவனாய் இருப்பேன்' என்று யாவே இறைவனோ, இயேசுவோ, தந்தையோ சொல்லவில்லை. மாறாக, மற்றவர்களின் தீமை தங்களுடைய நன்மையைப் பாதிக்காவண்ணம் அவர்கள் கவனமாக இருந்தார்கள். தன்னுடைய மகன் வெறுங்கையனாய் வந்தான் என்பதற்காக அவனுடைய தந்தை தன் கைகளையும் வெறுங்கையாக்கவில்லை. வெற்றுக்கையனாய் இருந்த மகனை இருந்த இடத்திலேயே நிரப்புகின்றார். தான் தெரிந்துகொண்ட இஸ்ரயேல் மக்கள் பிரமாணிக்கமின்மையில் இருந்தாலும் அவர்களுடைய தீமை கடவுளையோ மோசேயையோ பாதிக்கவில்லை. பவுல் சவுலாய் இருந்தபோது செய்த தீமையும் இயேசுவின் நன்மைத்தனத்தைப் பாதிக்கவில்லை. இன்று நான் என்னுடைய நன்மையை எப்படி நிர்ணயிக்கிறேன்? எனக்கு ஒருவர் தீமை செய்தால் நான் அவருக்கும் தீமை செய்ய நினைத்தேன் என்றால், என்னுடைய நன்மையைவிட அவருடைய தீமை வலுவானதாக இருக்க நான் அனுமதித்துவிடுகிறேன். காணாமல் போன ஆடும் நாணயமும் தங்களுக்கு ஏதோ வகையில் தீங்கிழைத்தாலும் அவற்றைத் தொலைத்தவர்கள் வாளாவிருக்கவில்லை. தங்களுடைய நன்மைத்தனத்தால் அவற்றைத் தேடினர். இதுவே இரக்கத்தின் இரண்டாம் பாடம்.

ஊதாரித் தந்தையின் இவ்வார்த்தைகள் அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகின்றன. 'என்னுடையதும் உன்னுடையதே' என்று அவர் தன்னுடைய இரண்டு மகன்களுக்கும் சொல்கின்றார். தன்னுடைய செயலுக்கு அவர் எந்த பதில் உபகாரமும் எதிர்பார்க்கவில்லை.

தன்னுடைய இளைய மகனைக் கண்டபோது கட்டியணைத்து அவனை வரவேற்ற தந்தை மூத்த மகனுக்கு அவ்வாறுசெய்யவில்லை. ஏனெனில், மூத்த மகனை அவர் தன்னுடைய சமம் என்று கருதினார். 'எனக்குரிய ஒன்று என் தம்பிக்குப் போகிறது' என்று மனதுக்குள் முணுமுணுத்த மூத்த மகனிடம், 'நான், என்னுடையது, என்னுடைய இளைய மகன், வேலைக்காரர்கள், சொத்து என எல்லாம் உன்னுடையது' என்று சொல்லி ஒரு நொடியில் அவனைத் தந்தையாக்கி இவர் மகனாகின்றார். இதுதான் இரக்கத்தின் மூன்றாம் குணம்.

அருட்பணி
இயேசு கருணாநிதி...

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 13 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



இராஜாங்க அமைச்சராக பிரேமலால் ஜயசேகர

## ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இராஜாங்க அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன் 37 இராஜாங்க 09

தேசிய பாதுகாப்பு, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சட்டம்

# ஒழுங்கைப் பேணுவதன் மூலம் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய முடியும்

புதிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன்

**ஸாதிக் ஷிஹான்**

தேசிய பாதுகாப்பு, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதன் மூலம் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய முடியும் என்று தெரிவித்த புதிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பொது மக்கள் நிலைமையை கருத்தில் கொண்டு சகிப்புத்தன்மையுடன் இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் கொழும்பில் உள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் நேற்று (12) இடம்பெற்ற எளிமையான நிகழ்வில் சமய ஆசிர்வாதங்களுக்கு மத்தியில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன வரவேற்றார்.

தேசியத் தேவையை நிறைவேற்றுவதற்காக, ஜனாதிபதியினால் தனக்கு வழங்கப்பட்டுள்ள கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தன்னால் முடியுமான அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் இதன் 09



# அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் இலங்கை வருகை

அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் (IPU) மார்ட்டின் சொங்கொங் (Martin Chungong) இலங்கைக்கு விசேட விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது விடுத்த அழைப்பின் பிரகாரம் அவரது விஜயம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் (11) நாட்டுக்கு வருகை தந்துள்ள மார்ட்டின் சொங்கொங்கை, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்திக்கவுள்ளார். தொடர்ந்து இலங்கை பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவையும் பின்னர் சபைத் தலைவர் சுசில் பிரேமஜயந்த மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரையும் சந்திக்க உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.



# பிரதமரை மாற்றுவதற்கான எத்தகைய தீர்மானமும் கிடையாது

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



எவர் எத்தகைய கூற்றுக்களை முன்வைத்தாலும் பிரதமரை மாற்றுவதற்கான எந்தத் தீர்மானமும் கிடையாது என ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போது பிரதமராக பதவி வகிக்கும் தினேஷ் குணவர்தன மிகுந்த அனுபவம் மிக்கவர் என்பது அவரது செயற்பாடுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பிரதமரை மாற்றுவதற்கு தயாரில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டபின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள தேனுக விதானகமகே அவரது இராஜாங்க அமைச்சில் கடமையைப் பொறுப்பேற்றபோது அந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்தபோதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்படி கூற்றை வெ ளியிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பி கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர், அரசியலமைப்புக்கு இணங்கவே இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்தையே தொடர்ந்தும் பெற்றுக்கொள்வர். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கண்டிய தேச வழமை திருமண திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியீடு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கண்டிய தேசவழமை திருமணம் மற்றும் விவாகரத்து திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. அதனை விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்‌ஷவின் பணிப்புரைக்கமைய மேற்படி திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டமூலத்தினூடாக குறைந்த வயதுடையோரின் திருமணம் தொடர்பாக அதிகாரமுள்ளவரின் விருப்பத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் நீக்கப் பட்டுள்ளதுடன் அதன் 09



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவையிட்டு கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாப குறிப்புப் புத்தகத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நேற்று (12) முற்பகல் தமது இரங்கலைப் பதிவு செய்தார். அதன்போது பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹுல்டனும் உடனிருந்தார்.

# தேசிய சபைக்கான யோசனை பாராளுமன்ற புதிய ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளீடு

அடுத்தவாரம் சபையில் நிறைவேற்றவும் உத்தேசம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தேசிய சபையை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நிலையில் தேசிய சபைக்கான யோசனை பாராளுமன்றத்தில் புதிய ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் தேசிய சபையொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அந்த யோசனைகள் பாராளுமன்றஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அடுத்தவாரம் அதனை நிறைவேற்றவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால தேசிய கொள்கையை திட்டமிடுவதற்காக வழிகாட்டல் மற்றும் பொருளாதார விடயங்கள் சம்பந்தமாக சிறு மற்றும் நடுத்தர பொது வேலைத்திட்டம் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளும் வகையிலேயே இந்தத் தேசிய சபை உருவாக்கப்படவுள்ளது.

உத்தேச தேசிய சபைக்கு சபாநாயகர் தலைமைப் பதவியை வகிப்பதுடன் பிரதமர், பாராளுமன்ற சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், ஆளும் கட்சி பிரதம கொரடா மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சிகளின் 09



மகாராணி இரண்டாம் எலிசபெத் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று (12) கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்ட போது...

# உள்ளூராட்சி மன்ற தேர்தல்; விரைவில் வர்த்தமானி வரும்

30ஆம் திகதிக்கு பின் வெளியாகும் சாத்தியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி பத்திரம் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குப் பின்னர் வெளியிடப்படவுள்ளதாக தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் கால எல்லை கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடையும் நிலையில் அதன் காலஎல்லையை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அடுத்த வருடம் மார்ச் மாதத்திற்கு முன்பதாக உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்தி அதற்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதன்படி நீடிக்கப்பட்டுள்ள கால எல்லை நிறைவடைவதற்கு முன்பதாக மூன்று மாதங்களுக்குமுன் தேர்தலை நடத்துவது தொடர்பில் அறிவிப்பை வெளியிட வேண்டியுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஒக்டோபர் 30 ஆம் திகதியில் இம்முறை வாக்காளர் இடாப்பில் கையொப்பமிடுவதற்கு தேர்தல்கள் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கிணங்க கையெழுத்திட்ட பின்னர் தேர்தல் நடத்துவது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவேண்டும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மனித பாவனைக்குரிய அரிசியில் விலங்குகளுக்கு தீவன உற்பத்தி

அநுராதபுரத்தில் பண்ணை ஒன்றுக்கு சீல் வைப்பு



மனித பாவனைக்கு ஏற்ற அரிசியைப் பயன்படுத்தி அரசாங்க கால்நடை பண்ணையொன்று கால்நடைகளுக்கு தீவனம் உற்பத்தி செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அனுராதபுரம் நுகர்வோர் அதிகாரசபையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது குறித்த பண்ணைக்கு சீல் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கால்நடை தீவன உற்பத்திக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த பத்தாயிரம் கிலோ அரிசியை நுகர்வோர் அதிகார சபையினர் கையகப்படுத்தியுள்ளனர்.

தம்புத்தேகம ஹுரிகஸ்வெவ பகுதியில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணையில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கையிருப்பு வைக்கப்பட்டுள்ளதாக அனுராதபுரம் நுகர்வோர் அதிகார சபைக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பன்றிகள் மற்றும் கோழிகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்பட்ட கொள்கலன்கள் மற்றும் நுகர்வுக்கு பயன்படுத்தக்கூடிய அரிசி இருப்புகளுக்கு சீல் வைக்க நுகர்வோர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ATM கார்ட் மோசடி மூலம்

# ஐம்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட நிதியை மோசடிசெய்த நபர் கைது

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ATM இயந்திரம் அமைந்துள்ள பிரதேசங்களில் காத்திருந்து நபர்களை ஏமாற்றி அவர்களது ஏரிஎம் அட்டைகளை தந்திரமாக பெற்று 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணத்தை மோசடி செய்துள்ள நபரொருவரை பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட போது குறித்த நபரிடம் பல்வேறு நபர்களுக்கு உரிமையான 8 வங்கி அட்டைகள் காணப்பட்டதாகவும் அவரைக் கைதுசெய்த கடுவலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கடுவலையிலுள்ள அரச வங்கியொன்றிற்கு அருகில் இருந்து 40 தடவைகளுக்கு மேல் பல்வேறு நபர்களை ஏமாற்றி 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணத்தை மோசடி செய்துள்ளதாகவும் கடுவலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் இவ்வாறு பியகம, மாலபே பிரதேசங்களிலுள்ள தனியார் மற்றும் அரச வங்கிகளில் ATM இயந்திரத்திற்கு அருகில் தங்கியிருந்து இவ்வாறு பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக பல முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் மோசடிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து சந்தர்ப்பங்களிலும் தொலைபேசி அழைப்பில் இருப்பது போன்று பாசாங்கு செய்து இயந்திரம் அமைந்துள்ள பகுதியில் பிரவேசித்து கைங்கரியமாக தமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 28ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 16

## குறள் தரும் சிந்தனை



வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்

சொற்களை அளவறிந்து உரைத்திடும் தூயவர்கள் அவையிலிருப்போரின் வகையறியும் ஆற்றல் உடையவராயிருப்பின் பிழை நேருமாறு பேசமாட்டார்கள்.

# சர்வதேச உறவில் இலங்கையின் சமீப கால முன்னேற்றங்கள்

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படுமென்று அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரியான சமந்தா பவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த சமந்தா பவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அவ்வேளையிலேயே அமெரிக்கா சார்பிலான உறுதிமொழியை அவர் வழங்கியிருந்தார்.

இலங்கையில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கை மக்களின் இயல்பு வாழ்க்கையை மீண்டும் முன்னைய நிலைமைக்குக் கொண்டு வருவதற்கும், நாட்டை முன்னேற்றுவதற்கும் அமெரிக்கா தொடர்ந்தும் தனது பூரண ஒத்துழைப்பை வழங்குமென்று அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரி சமந்தா பவர் தனது இலங்கை விஜயத்தின் போது தெரிவித்துள்ளார்.

அதேசமயம் இலங்கைக்கான உதவித் தொகையாக 60 மில்லியன் டொலர் நிதியை அமெரிக்கா வழங்குமென்றும் சமந்தா பவர் தெரிவித்துள்ளார். இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதில் அமெரிக்கா கொண்டுள்ள அதிக அக்கறையையே அவரது அறிவிப்புகள் வெளிப்படுத்துகின்றன. அதேவேளை எமது நாட்டை மீளக்கட்டியெழுப்புவதானால் சர்வதேச உதவிகள் மிகவும் அவசியமென்பதையும், சர்வதேசத்துடன் இலங்கை மிகவும் நெருக்கமான நல்லிணக்கத்தைக் கொண்டிருப்பது முக்கியமென்பதையும் சமந்தா பவரின் வருகையானது எமக்கு உணர்த்துகின்றது.

மேற்கு நாடுகளுடனான இலங்கையின் நல்லுறவு கடந்த காலத்தில் சீராக இருந்ததில்லை. கடந்த கால அரசாங்கங்கள் சர்வதேசத்துடனான நல்லுறவை சீராகப் பேணுவதில் தவறான அணுகுமுறையைக் கடைப்பிடித்ததே இதற்கான காரணம் எனலாம். உலகப் பொதுமன்றமான ஐக்கிய நாடுகள் சபையுடன் கூட நல்லிணக்கத்துடனான அணுகுமுறை கடைப்பிடிக்கப்படவில்லையென்ற விமர்சனங்கள் அந்நாளில் உலவியது நினைவிருக்கலாம். அதன் காரணமாக எமது நாடு சர்வதேசத்துடன் நெருக்கமாக செயற்பட முடியாத கட்டமொன்று அக்காலத்தில் நிலவியது. இலங்கைக்கான உதவிகளிலும் தாமதங்கள் இழுபறிகள் ஏற்பட்டிருந்தன.

எந்தவொரு நாட்டைப் பொறுத்தவரையிலும் சர்வதேசத்துடன் இராஜதந்திர அணுகுமுறை சிறப்பாக இருப்பது முக்கியம். சர்ச்சைக்குரிய விவகாரங்களை புத்திசாதுரியத்துடன் கையாளுகின்ற ஆற்றலும் அரசாங்கத்துக்கு இருப்பது முக்கியம். ஆனால் இலங்கையில் கடந்த காலத்தில் இராஜதந்திர உறவுகள் பாராட்டும்படியாக இருந்ததில்லை. அரசாங்க தரப்பில் பலதரப்பினரும் பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிட்டு வந்ததனால், சர்வதேச அரங்கில் எமது நாடு கூர்ந்து நோக்கப்படுகின்ற நாடாக மாறியது.

இவ்வாறான நிலைமையானது கட்டாயமாக மாற்றப்பட வேண்டியது அவசியம். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் சர்வதேசத்துடனான இலங்கையின் உறவு படிப்படியாக சீரடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி இலங்கைக்கு வழங்கப்படுவதற்கான இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டமை இதற்கான ஒரு உதாரணம் ஆகும்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாயின் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி பெறப்படுவது அவசியமென்று பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டு வந்த போதிலும், அந்த உதவியைப் பெறுவதில் முன்னேற்றமான நகர்வுகள் ஏற்பட்டிருக்கவில்லை. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னரே சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியானது இலங்கைக்குக் கிடைப்பதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்தே அமெரிக்காவின் உதவி இலங்கைக்குக் கிடைப்பதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா உறுதியளித்திருக்கும் இந்த உதவித்தொகையானது சிறிதாக இருந்த போதிலும், இலங்கையின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கு கொஞ்சமாவது உதவியளிக்குமென்பதில் ஐயமில்லை. அதேசமயம் சமந்தா பவருடனான சந்திப்பின் போது ஜனாதிபதி சாதகமான சில விடயங்களைத் தெரிவித்துள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கவிருக்கும் சாதகமான நடவடிக்கைகளை அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரியான சமந்தா பவரிடம் எடுத்துக் கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதுஒருபுறமிருக்க, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடுப்புக்காவலில் உள்ள முஸ்லிம்களில் விடுதலை செய்யக் கூடியவர்களை அடையாளம் காணுமாறு புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், பெண்கள் சமத்துவம், கிராம மட்டத்தில் மக்கள் சபை அமைத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் சமந்தா பவரிடம் விரிவான பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டார். எமது நாடு எவ்வேளையிலும் சர்வதேச நாடுகளுடன் சிறப்பான நல்லுறவுகளைப் பேண வேண்டுமென்பதையும், அதன் மூலமே பொருளாதார வளர்ச்சிக்கான பாதை திறக்குமென்பதையும் அரசியல் தரப்பினர் அனைவரும் உணர்ந்து கொள்வது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# பலதரப்பினராலும் இழிவுபடுத்தப்பட்டு மன்னரின் இராணியாக உயர்ந்தவர் கமிலா



## மக்களின் ஆதரவை கமிலா பெறுவாரா என்பதில் சந்தேகம்!

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் 19ம் திகதி காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளன. வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் இறுதிச்சடங்கு நடைபெறும்.

இதற்கிடையில் பிரித்தானியாவின் புதிய மன்னராக இரண்டாம் எலிசபெத்தின் மகன், மூன்றாம் சார்ள்ஸ் பிரித்தானியா மற்றும் 14 நாடுகளுக்கு மன்னராக பொறுப்பேற்றுக் கொண்டார். இறுதிச்சடங்கு நடைபெறும் தினத்தன்று வங்கிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. ராணியின் இறுதிச் சடங்குக்கு முன்னதாக மகாராணியின் பூதவுடல் கடந்த ஞாயிறு வீரர்களால் ஹோலிரூட்ஹவுஸ் அரண்மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து நேற்று 12 ஆம் திகதி மகாராணியின் பூதவுடல் ஹோலிரூட் ஹவுஸிலிருந்து செயின்ட் கில்ஸ் கதீட்ரல் வரை ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது. இன்று செவ்வாய்க்கிழமை பூதவுடல் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

நாளை 14 ஆம் திகதி பூதவுடல் அடங்கிய பேழை மீது இம்பீரியல் ஸ்டேட் கிரீடம் மற்றும் மலர் மாலை வைக்கப்படும். இறுதியாக செப்டம்பர் 19ம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் மகாராணி இரண்டாம் எலிசபெத்திற்கு இறுதிச் சடங்குகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மன்னர் சார்ள்ஸின் மனைவியான, கமிலா, இளம் வயது முதலே அவரது நம்பிக்கைக்குரியவராக இருந்தவர். 17 ஆண்டுகளாக அவருடைய மனைவியாக இருக்கும் கமிலா, தற்போது அவரது இராணியாகியுள்ளார்.

தேசிய, சர்வதேச விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களில் சார்ள்ஸின் பக்கத்திலிருக்க வேண்டிய நிலையில் அவரை பொதுமக்கள் பார்த்திருக்கின்றனர். ஆனால், அப்படியிருப்பது அவ்வளவு எளிதானதல்ல என்பதை கமிலா ஒப்புக்கொண்டுள்ளார்.

கமிலா பார்க்கர் பவுல்ஸ் அளவுக்கு இழிவுபடுத்தப்பட்ட பெண்கள் வெகு சிலர்தான். வேல்ஸ் இளவரசி டயானாவின் திருமண முறிவோடு இவர் தொடர்புபடுத்தப்பட்டார். சார்ள்ஸை வாழ்க்கைத் துணையாகத் தெரிவு செய்த பிறகு, தன்னுடைய நடத்தை மற்றும் தோற்றத்திற்காக ஊடகங்களால் தொடர்ந்து குறிவைக்கப்பட்டார். அதையெல்லாம் பொறுமையாகக் கடந்து வந்த கமிலா, இன்று அரச குடும்பத்தின் மூத்த பெண் உறுப்பினர் என்ற நிலையை அடைந்துள்ளார்.

ஆனால் புதிய இராணி கமிலா ஒருபோதும் பொதுமக்களின் ஆதரவைப் பெறமுடியாமல் போகலாம் என்கின்றனர் பிரித்தானிய மக்கள்.

1947 ஜுலை 17 அன்று பிறந்த கமிலா ரோஸ்மேரி ஷாண்ட், அரியணையின் வாரிசை மணப்போம் என்று நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். அவர் குடும்பம் உயர்தர, பணக்காரக் குடும்பமாக இருந்தாலும் அரச குடும்பம் இல்லை. அவருடைய தந்தை ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி, தாய் இல்லத்தரசி.

சுவிற்சர்லாந்தில் பாடசாலைப்படிப்பை முடித்த கமிலா, 60களின் மத்தியில் குதிரைப்படை அதிகாரி அண்ட்ரூ பார்க்கர் பவுல்ஸுடன் உறவில் இருந்ததற்காக அறியப்பட்டார். பல ஆண்டுகள் நீடித்த உறவுக்குப் பிறகு, கமிலா 1973இல் அண்ட்ரூ பார்க்கர் பவுல்ஸை மணந்தார்.

70களின் தொடக்கத்தில் அவர் சார்ள்ஸுக்கு அறிமுகமாகினார். கமிலாவை பார்த்தவுடன் அவர் காதலில் விழுந்துவிட்டதாக இளவரசர் சார்ள்ஸ் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஜொனாதன் டிம்பிள்பி தெரிவிக்கிறார்.

டயானாவிடம் 1981இல் சார்ள்ஸ் தன் காதலைத் தெரிவித்தார். அந்த நேரத்திலும், கமிலாவுடன் அவருக்கு நட்பு இருந்தது. கமிலாவுக்காக இருவரது செல்லப்பெயர்களின் முதல் எழுத்து பொறிக்கப்பட்ட காப்பு ஒன்றை சார்ள்ஸ் உருவாக்கி வைத்திருந்ததாகவும் அது தெரியவந்ததும் சார்ள்ஸ் உடனான திருமணத்தை கிட்டத்தட்ட முறித்துக்கொள்ளும் முடிவுக்கு டயானா வந்ததாகவும் 'In Diana: Her True Story' என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியர் அண்ட்ரூ மார்ட்டன் விபரிக்கிறார்.

கமிலாவுடனான சார்ள்ஸின் காதலால் டயானா திருமண வாழ்வில் மிகவும் சிரமப்பட்டார் என்பதில் சந்தேகமில்லை. டயானாவுடனான தனது திருமணம், மீட்கமுடியாத அளவுக்கு முறிந்தபோதுதான் சார்ள்ஸ், கமிலாவிடம் தங்கள் காதலை மீண்டும் புதுப்பிக்க வலியுறுத்தினார்.

டயானா 1997இல் உயிரிழந்த பிறகு சார்ள்ஸ் தனது மகன்களான வில்லியம் மற்றும் ஹரி மீது கவனம் செலுத்தினார். கமிலா பொதுவெளியின் பார்வையிலிருந்து பின்வாங்கினார். ஆனால், அவர்களின் உறவு தொடர்ந்தது.

தனது வாழ்வில் கமிலா தவிர்க்க முடியாதவராக இருக்கிறார் என்ற நிலைப்பாட்டில் சார்ள்ஸ் இருந்தார். எனவே பொதுமக்களின் பார்வையில் அவருக்கு ஒரு நற்பெயரை உருவாக்க கவனமாகத் திட்டமிடப்பட்ட முயற்சிகளைத் தொடங்கினார். இது 1999ஆம் ஆண்டில் கமிலாவின் சகோதரியின் 50வது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக ரிட்ஸ் ஹோட்டலில் நடந்த இரவுநேர நிகழ்ச்சியிலிருந்து இது தொடங்கியது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் விண்ட்சர் கில்ட் ஹோலில் ஒரு சிறிய சிவில் விழாவில் திருமணம் செய்து கொண்டனர்.

# அனுராதபுரம் மாவட்ட விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை

## அமைச்சர் மஹிந்த அமரவீர நேரில் உறுதி

அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் அனுராதபுரம் மாவட்ட விவசாய சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் அனுராதபுரம் விலங்கு பயிர் தொழில்நுட்ப கூட்ட மண்டபத்தில் இரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற போது அமைச்சர் அவ்வாறு தெரிவித்தார்.





அனுராதபுரம் விலங்கு பயிர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு விஜயம் செய்த அமைச்சர், நிறுவனத்தின் தற்போ தைய செயற்பாடுகள் தொடர்பில் கண்காணித்ததுடன், விவசாயிக ள் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

விவசாயிகள் தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் அதற்கான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தீர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அதேநேரம் விவசாயிகளுக்கு திரவ தெளிப்பான்களும் வழங்கப்பட்டன.

2022 / 23 பெரும்போகத்தின் போது சோளம் உள்ளிட்ட இடைக்கால தோட்டச் செய்கைகள் தொடர்பில் சரியான காலத்தில் இரசாயனப் பசளை, களைகொல்லிகள், பூச்சிகொல்லிகள் என்பவற்றை பெற்றுத் தரும்படியும் நிலம் தயாரித்தல் அறுவடை பணிகள் மற்றும் தண்ணீர் பம்பிகளை இயக்குவதற்குத் தேவையான எரிபொருட்களை பெற்றுத்தரும்படியும் விவசாயிகள் கோரினர்.

தரமான விதைகளை சலுகை அடிப்படையில் பெற்றுத் தருமாறும் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதுடன் ஒரு கிலோ நெல்லின் விலையை அதிகரித்து நெல்சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக நெல்லை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2021 /22 பெரும்போகத்தின் போது சேதனப் பசளைக்கு மாறியதால் விவசாயிகளின் வருமானம் 40 வீதத்தினால் குறைந்துள்ளது. அன்றைய விவசாய அமைச்சர் உறுதியளித்ததைப் போன்று உடனடியாக இழப்பீடுகளை பெற்றுத் தருமாறும் பயிர்ச்சேதம், காப்பீட்டுத்தொகை உள்ளிட்ட இழப்பீடுகளை அதிகரிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. விவசாயிகளுக்கு விவசாய அடையாள அட்டையினை பெற்றுத் தருவது உள்ளிட்ட பல கோரிக்கைகளை விவசாய சங்க பிரதிநிதிகள் அமைச்சரிடம் முன்வைத்தனர். குறித்த கோரிக்கைகள் தொடர்பில் விரைவான தீர்வுகளை பெற்றுத் தருவதாக அமைச்சர் விவசாய சங்க பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

மதார்தம்பி ஆரிப்
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# சவுக்கடி கிராமத்துக்கு தோள் கொடுத்துள்ள கிழக்கு பல்கலைக்கழகம்

மட்டக்களப்பின் வடக்கில் அமைந்துள்ள சவுக்கடி கிராமம் பல்வேறு விதங்களில் நலிவுற்றதாய் காணப்படுகின்றது. போசாக்கு குறைந்த பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் அங்கு வாழ்கின்ற அதேவேளை, வளங்கள் சூறையாடப்படுவது பெரியதோர் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இவ்வாறான பல குறைபாடுகளைப் போக்குவதற்கு ஆதரவளிக்கும் பொருட்டு இக்கிராமத்தை கிழக்குப் பல்கலைக்கழகம் தத்தெடுத்து, அதனை ஓர் மாதிரிக்கிராமமாக அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக ஒன்றிணைந்த மருத்துவ முகாம் மற்றும் தொற்றுநோய்கள், தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு இடம்பெற்றுள்ளன.







பல்கலைக்கழக சமூகம் மற்றும் தொழில் துறைகளை பல்கலைக்கழகத்தோடு இணைக்கும் பிரிவின் ஒழுங்குபடுத்தலில் பிராந்திய சுகாதார வைத்திய பணிமனை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இம்முகாமை மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், பிராந்திய சுகாதார வைத்திய பணிப்பாளர், ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர், ஏறாவூர் பிரதேச வைத்திய அதிகாரி ஆகியோர் ஒன்றிணைந்து ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இம்முகாமில் பல்கலைக்கழக பதிவாளர், நிதியாளர், இயக்குனர்கள், விரிவுரையாளர்கள், ரோட்டரி கழகத்தினர் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் குறித்த மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் "இக்கிராமத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் கடல் வளம், நிலத்தடி நீர், சிறு குளங்கள் மற்றும் வாவி போன்ற இயற்கை வளங்களுடன் மனிதவளமாக அநேக இளைஞர்கள் இருப்பது சிறப்பம்சமாகும். எனவே பல்கலைக்கழகமாக அனைத்து பீடங்களும் இணைந்து இக்கிராமத்தினை அபிவிருத்தி செய்து ஓர் உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவதே எமது திட்டமும் எதிர்கால பணியுமாகும். இதற்கான பாலமாக பல்கலைக்கழகத்துடன் சமூகம் மற்றும் தொழில்துறையை இணைக்கும் பிரிவு அதன் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அருளானந்தம் வழிநடத்தலில் செயற்படும்" எனக் குறிப்பிட்டார்.

மாவட்ட அரச அதிபர் கே.கருணாகரன், பிராந்திய சுகாதார வைத்தியப் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன், ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம், ஏறாவூர் பிரதேச வைத்திய அதிகாரி டொக்டர் ஸ்ரீநாத் ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவமுகாமை ஆரம்பித்து வைத்ததுடன், சவுக்கடி கிராம அபிவிருத்தியில் பல்கலைக்கழகத்துடன் கைகோர்ப்பதாகவும் தெரிவித்தமை சிறப்பம்சமாகும்.

விசேடமாக மட்டக்களப்பு ரோட்டரி கழகம் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கியதுடன் றோட்டரியனும் பல்கலைக்கழக பதில் துணைவேந்தருமாகிய டொக்டர் கருணாகரன் முகாமில் பணியாற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

அரச அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட வைத்தியர்கள், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் ஆகியோர் இணைந்து ஒரு நோக்கத்திற்காக செயற்பட்டமை நல்லதொரு அம்சமென டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

காலை 9 மணிமுதல் மருத்துவ முகாம் இடம்பெற்றதுடன் மாலை 3 மணிமுதல் கிராமத்தினுள் மருத்துவ கற்கை மாணவர்களினால் தொற்றுநோய்கள், தொற்றா நோய்கள் மற்றும் சமூகம் சார்ந்த சுகாதார பழக்கவழக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வு கல்வி நிகழ்வும் இடம்பெற்றது.

இம்மருத்துவ முகாமுக்கான சகல ஒழுங்கமைப்பையும் கிராம உத்தியோகத்தர் தலைமையில் சவுக்கடி மத்தி, சவுக்கடி கிழக்கு, சிவபுரம் ஆகிய கிராமங்களின் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் சமுர்த்தி சங்கங்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சவுக்கடி பாரதி வித்தியாலய அதிபர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் இடத்தினை ஒழுங்கமைத்திருந்தனர்.

எம்.எஸ்.எம்.நூர்தீன்
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மறைந்த கலைஞர்களான பாரதி கலாமன்றத்தின் தலைவர் த.மணி, புதிய அலை கலை வட்டத்தின் நடிகர் வி.செல்வராஜ் மற்றும் பிரபல தபேலா வாத்தியக் கலைஞர் ராதா வீரசிங்கம் ஆகியோருக்கான அஞ்சலிக் கூட்டமும், புதிய அலை கலை வட்டத்தின் எவோட்ஸ் 2022 கலாசார கட்டுரைப்போட்டி யில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் அண்மையில் புறக்கோட்டை கதிரேசன் மண்டபத்தில் புதிய அலை கலை வட்டத்தின் தலைவர் ராதா மேத்தா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக டவர்ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் மறைந்த கலைஞர்களுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அத்துடன் கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் பிரதம அதிதியால் வழங்கி வைக்கப்பட்டன.

# கண்டி மாவட்டத்தில் 14 மணிநேர நீர் வெட்டு

**பேருவளை விசேட நிருபர்**

கண்டி மாவட்டத்துக்கு உட்பட்ட கட்டுகஸ்தோட்டவில் அமைந்துள்ள பாரிய கண்டி நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் திருத்த வேலைகள் காரணமாக இன்று 13ஆம் திகதி மு.ப. 6 மணி முதல் பி.ப. 8 மணி வரையிலான 14 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

ஹரிஸ்பத்துவ, அக்குறணை, பூஜாப்பிட்டிய, பாத்ததும்பர, கண்டி மாநகர சபைக்குட்பட்ட பிரதேசம், அம்பிட்டிய மற்றும் ஹந்தான ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும். இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

# மரக்கறிகளின் விலைகள் அதிகரித்ததால் சந்தைக்கு வருவோரின் தொகையில் வீழ்ச்சி



**(ரொட்டவெவ குறூப் நிருபர் )**

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ள நிலையில், மரக்கறிகளின் விலைகளும் தற்போது அதிகரித்துள்ளன.

இவ்வாறு,மரக்கறிகளின் விலை அதிகரித்ததால் திருகோணமலை பொதுச்சந்தையில் மக்களின் வருகை குறைந்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், திருகோணமலை பொதுச்சந்தை கட்டடத் தொகுதியில் ஒரு கிலோ நுவரெலியா கரெட் 480 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் மலேசியா போஞ்சி ஒரு கிலோ 800 ரூபாவுக்கும், வெலிமடை போஞ்சி 680 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன் கல் கோவா 520 ரூபாய், கோவா 480 ரூபாய்க்கும் லீக்ஸ் 360 ரூபாய்க்கும் தக்காளி 360 ரூபாய்க்கும், எம்.ஜ. பச்சை மிளகாய் 400 ரூபாய்க்கும் மிளகாய் 320 ரூபாய், கறி மிளகாய் 800 ரூபாய் கத்தரி 300 ரூபாய் கிழங்கு 320 ரூபாய் தேசிக்காய் 400 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பினால் தாம் மிகவும் பாதிப்புகளை எதிர்நோக்கி வருவதாகவும் இன்னும் கடனாளியாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

# கடல்பிரதேசங்களை பாதுகாக்கும் விழிப்புணர்வு சைக்கிளோட்டம்

## இலங்கையை சுற்றிவந்தோருக்கு பாராட்டு

**(கல்லடி குறூப்நிருபர்)**



"ஓசோன் ரைட்" எனும் கருப்பொருளில் நாட்டின் கரையோர பிரதேசங்களூடாக, முழு இலங்கையையும் சைக்கிளில் சுற்றி வந்த இளைஞர்கள் இருவருக்கு மட்டக்களப்பில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. கடல் மற்றும் கரையோர பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பிலிருந்து 1300 கிலோமீற்றர் தூரம் இவ்விளைஞர்கள் பயணம் மேற்கொண்டனர். தங்களது பயணத்தை முடித்துக் கொண்ட சஞ்ஜீவன் அமலநாதன் மற்றும் அனாமிகன் குமாரசிங்கம் ஆகிய இளைஞர்களுக்கே (11) கல்லடி கடற்கரையில் வரவேற்பளிக்கப்பட்டது.

“Ocean biome” (ஓசியன் பைஓமி) அமைப்பின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில், மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி பழைய மாணவரான சஞ்ஜீவன் அமலநாதன் மற்றும் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிகுடி பழைய மாணவரான அனாமிகன் குமாரசிங்கம் ஆகியோரின் பெற்றோர், நண்பர்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி கலந்து கொண்டு, இரு இளைஞர்களையும் பாராட்டி கௌரவித்தார்.இலங்கையின் கரையோர மாவட்டங்களான மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், புத்தளம், நீர்கொழும்பு, கிக்கடுவை, ஹம்பாந்தோட்டை, பொத்துவில் ஊடாக மீண்டும் மட்டக்களப்பை வந்த இவர்கள் மொத்தமாக 1,300 கிலோ மீட்டர் தூரத்தை 11 நாட்களில் சவாரி வந்தனர்.இப்பயணம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமானது.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் மர்ஹூம் மௌலவி எம்.கியூ. புர்ஹானுத்தீன் நினைவுகள்



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்து பெருமையை தேடிக்கோண்ட, சன்மார்க்க அறிஞர்கள் வரிசையில் நம்மை விட்டும் பிரிந்த மர்ஹூம் அல்ஹாஜ் மௌலானா மௌலவி பாஸில் எம்.கியூ. புர்ஹானுத்தீன் அவர்களின் நினைவுகளை அவரது புதல்வர், மௌலவி தகிய்யுத்தீன் அஹ்மத் அவர்கள் நினைவுகூருகிறார்.

இந்நிகழ்வு எதிர்வரும் செவ்வாய் கிழமை இரவு 8.15 மணியளவில் முஸ்லிம் சேவையில் இடம்பெறவுள்ளது.

1973 ஆம் ஆண்டு தொட்டு 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மர்ஹூம் மௌலவி புர்ஹானுத்தீன் அவர்கள் முஸ்லிம் சேவையில் பல்வேறு சன்மார்க்க நிகழ்ச்சிகளை வழங்கி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை தேடிக்கொண்ட மூத்த உலமாக்களில் பிரதானமிக்க ஒருவராவார். சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தார். பிரபல மிக்க இஸ்லாமிய சஞ்சிகையான "நிதாஉல் இஸ்லாம்" சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். நாவலப்பிட்டியில் அமைந்துள்ள அல் ஜாமிஅதுல் இஸ்லாமிய்யா அரபுக் கலாபீடத்தின் ஸ்தாபகரான இவர்,

அரபு, தமிழ், உருது, ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்.

முஸ்லிம் சேவையின் ஜனரஞ்சக நிகழ்ச்சிகளில் ஒன்றான 'உருது மஞ்சரி' நிகழ்ச்சியின், புகழ்பெற்ற நடத்துனரான மர்ஹூம் ஹாஜி உஸ்மான் பைலா அவர்களுக்குப் பிறகு, இந்த நிகழ்ச்சித் தொடரை ஜனரஞ்சக படுத்தியவர்களுள் இவரும் ஒருவரே.

இவரது நினைவுகளை தாங்கி வரும் பாரம்பரியம் நிகழ்ச்சியினை, எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# புத்தளத்தில் இலவச ஆயுர்வேத சிகிச்சை நிலையம் திறப்பு

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் முன்னாள் நகரபிதா மர்ஹூம் கே.ஏ.பாயிஸின் திட்டங்களில் ஒன்றான புத்தளம் நகருக்குள்ளேயே இலவச ஆயுர்வேத வைத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இன்று (13) செவ்வாய்க்கிழமை காலை 08 மணியளவில் ஆயுர்வேத திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் புத்தளம் சவீவபுரம் தாய்சேய் சிகிச்சை நிலைய வளாகத்தில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

புத்தளம் நகரபிதா எம். ரபீக் தலைமையில் நடைபெறவுள்ள திறப்பு விழாவில்

ஆரம்ப தினமான இன்றைய தினம் சுமார் 100 பேருக்கான இலவச மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதனால் தேவையுடையவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டு இவ்வாறான இலவச மருத்துவ சேவைகள் தொடர்ந்தும் நகரசபையினால் முன்னெடுக்கப்படவுள்ளதாக நகர பிதா ரபீக் தெரிவித்தார்.






ச.வ.பி. 4/2011

# 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் 10(1)(ஆ)(ii) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) உட்பந்தியின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் தவிசாளர், சாந்த நிரியெல்ல ஆகிய நான், நுகர்வோர் பாதுகாப்பிற்காக-

(அ) நிரல் 2 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களை உற்பத்திசெய்தல், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் மற்றும் பெற்றுக்கொள்ளல்களில் ஈடுபடுகின்ற முதலாம் அட்டவணையின் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள உற்பத்தியாளர்கள் எவரும் அட்டவணையின் நிரல் 3 இல் காணப்படுகின்ற விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளிற்கு உட்பட்டு உற்பத்தி, சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை மற்றும் பற்றுக்கொள்ளலை மேற்கொள்ள வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றேன்.

(ஆ) நிரல் 2 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்தல், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் மற்றும் பெற்றுக்கொள்ளல்களில் ஈடுபடுகின்ற இரண்டாம் அட்டவணையின் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வியாபாரிகள் எவரும் அட்டவணையின் நிரல் 3 இல் காணப்படுகின்ற விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளிற்கு உட்பட்டு உற்பத்தி, சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை மற்றும் பெற்றுக்கொள்ளலை மேற்கொள்ள வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றேன்.

### முதலாம் அட்டவணை

| நிரல் 1 உற்பத்தியாளர்களின் வகை | நிரல் 2 பொருட்கள் | நிரல் 3 நிபந்தனைகள் |
|---|---|---|
| (1) ஏதேனும் பண்டம் அல்லது ஏதேனும் பொருட்களை தயாரிக்கும் எவரேனும் ஆள்<br>(2) இரசாயன செயன்முறையினாலோ அல்லது வேறு வழிகளிலோ ஏதேனுமொரு பொருளை அல்லது பாகத்தை ஒருங்கிணைக்கும் அல்லது இணைக்கும் எவரேனும் ஆள்<br>(3) ஏதேனும் பண்டத்தை விற்பனைக்காக மாற்றியமைக்கும் எவரேனும் ஆள் | (அ) விலங்குத் தீவணம்<br>(ஆ) குடிநீர் போத்தல்<br>(இ) தகரத்திலடைக் கப்பட்ட மீன்<br>(ஈ) சீமெந்து<br>(உ) பருப்பு<br>(ஊ) டயப்பர்கள் மற்றும் சனிடரி நப்கின்ஸ்<br>(எ) சமையல் தேங்காய் எண்ணெய்<br>(ஏ) சமையல் உப்பு<br>(ஐ) முட்டைகள்<br>(ஒ) உரங்கள் (பசளை அல்லது இரசாயனம்)<br>(ஓ) பால் மா, துய பசும் பால் அல்லது குழந்தைகளுக்கான பால் மா<br>(ஔ) அரிசி<br>(க) எ்கு மற்றும் இரும்புக் கம்பிகள்<br>(ச) கோதுமை மா | (அ) எவரேனும் ஆள் அல்லது பாவனையாளரினால் கோரப்பட்ட பொருட்கள் நியாயமான காலப்பகுதியினுள் மற்றும் சந்தை விலைக்கு தாமதமின்றியும் அல்லது 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் நிர்ணயிக்கப்பட்ட அதிகூடிய விலைக்கு விநியோகிக்கப்பட வேண்டும்.<br>(ஆ) உற்பத்தியாளரின் உடைமை அல்லது கட்டுப்பாட்டில் போதுமான மூலப்பொருள், தொழிலாளர் அல்லது இயந்திரங்கள் இல்லாதவிடத்து, வேறெந்த காரணியும் உற்பத்திச் செயன்முறையை பாதிக்காதவரையில், உற்பத்திக் கொள்ளளவின் உச்சளவு பேணப்பட வேண்டும்.<br>(இ) பின்வரும் விபரங்கள் உள்ளடக்கிய எவரேனும் ஆள் அல்லது பாவனையாளருக்கு அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் வடிவிலான பற்றுச்சீட்டு/விலைப்பட்டியல் வழங்கப்பட வேண்டும் மற்றும் அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருக்க வேண்டும்:-<br>(i) பற்றுச்சீட்டு்விலைப்பட்டியல் இல;<br>(ii) கொடுக்கல்வாங்கல் சில்லறையா அல்லது மொத்த விற்பனையா என்பது;<br>(iii) விற்பனைத் திகதி;<br>(iv) விற்கப்பட்ட பொருட்களின் அளவு;<br>(v) விற்கப்பட்ட பொருட்களின் வகை;<br>(vi) விற்கப்பட்ட பொருட்களின் அலகொன்றின் பெறுமதி;<br>(vii) விற்கப்பட்ட பொருட்களின் மொத்த பெறுமதி;<br>(viii) ஏதேனுமிருப்பின், தொகுதி இல; அத்துடன்<br>(ix) எவரேனும் ஆள் அல்லது பாவனையாளரின் பெயரும் முகவரியும்.<br>(ஈ) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினால் எழுத்துமூலம் வழங்கப்பட்ட அறிவித்தலிலுள்ள அறிவுறுத்தல்கள் உற்பத்தி செயன்முறையை பாதிக்கும் எந்தவொரு காரணத்தின் எந்தவொரு நிகழ்வின் போதும் பின்பற்றப்பட வேண்டும்.<br>(உ) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு உற்பத்தியாளரும் உற்பத்திக்கொள்ளளவின் உச்ச எல்லையின்கீழ் ஒரு வருடத்திற்கு, காலாண்டிற்கு, பருவத்திற்கு அல்லது மாதத்திற்கு தேவைப்படும் மூலப்பொருட்களது சராசரி கொள்ளளவை விஞ்சும் மூலப்பொருட்களது எந்தவொரு கொள்ளளவையும் உடைமையாக கொண்டிருத்தலாகாது. மூலப்பொருட்களது அதிகளவான கொள்ளளவை ஏதேனும் உற்பத்தியாளர் அவ்வாறு வைத்திருக்குமிடத்து, அத்தகைய உற்பத்தியாளர் அத்தகைய மூலப்பொருட்களது அதிகளவான கொள்ளளவை குறித்து நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினால் எழுத்துமூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக செயற்படவேண்டும். |

### இரண்டாம் அட்டவணை

| நிரல் 1 வியாபாரிகளின் வகை | நிரல் 2 பொருட்கள் | நிரல் 3 நிபந்தனைகள் |
|---|---|---|
| (1) பொருட்களை மொத்தமாக ஏனைய நபர்களுக்கு விற்பனை அல்லது விநியோகிக்கும் எவரேனும் ஆள்.<br>(2) பொருட்களை சில்லறை விலைகளில் பாவனையாளர்களுக்கு விற்பனை அல்லது விநியோகிக்கும் எவரேனும் ஆள்.<br>(3) பொருட்களை விற்பனை அல்லது விநியோக நோக்கத்துக்காக இறக்குமதி செய்யும் எவரேனும் ஆள்.<br>(4) கருத்திற்கொள்ள வேண்டிய சேவைகளை வழங்கும் எவரேனும் ஆள். | (அ) விவசாயவேதிகள்<br>(ஆ) வாகன உதிரிப்பாகங்கள்<br>(இ) பெரிய வெங்காயங்கள் மற்றும் சிவப்பு வெங்காயங்கள்<br>(ஈ) குடிநீர் போத்தல்<br>(உ) தகரத்திலடைக்கப்பட்ட மீன்<br>(ஊ) சீமெந்து<br>(எ) பட்டாணிக் கடலைகள்<br>(ஏ) கோழி இறைச்சி<br>(ஐ) மல்லி<br>(ஒ) பருப்பு<br>(ஓ) டயபர் மற்றும் சனிடரி நப்கின்ஸ்<br>(ஔ) காய்ந்த மிளகாய்<br>(க) கருவாடு<br>(ங) சமையல் எண்ணெய்<br>(ச) சமையல் உப்பு<br>(ஞ) முட்டைகள்<br>(ட) உரங்கள் (பசளை அல்லது இரசாயனம்)<br>(ண) உரம்<br>(த) வெள்ளைப்பூடு<br>(ந) பயறு<br>(ப) LP வாயு<br>(ம) சோளம்<br>(ய) மருத்துவ உபகரணங்கள் மற்றும் துனைப்பாகங்கள்<br>(ர) பால் மா/தூய பசும் பால்/குழந்தைகளுக்கான பால் மா<br>(ல) நெல்<br>(வ) கிழங்கு<br>(ழ) அரிசி<br>(அஅ) சிவப்பு வெங்காயம்<br>(அஆ) கட்டுமான தொழில் துறையில் பயன்படுத்தப்படும் மணல், செங்கல் மற்றும் உலோகம்<br>(அஇ) எ்கு மற்றும் இரும்பு கம்பிகள்<br>(அஈ) சீனி (சிவப்பு மற்றும் வெள்ளை)<br>(அஉ) டயர் மற்றும் டியுப்<br>(அஊ) மஞ்சள்<br>(அஎ) கோதுமை மா | (அ) எவரேனும் ஆள் அல்லது பாவனையாளரினால் கோரப்பட்ட பொருட்கள் நியாயமான காலப்பகுதியினுள் மற்றும் சந்தை விலைக்கு தாமதமின்றியும் அல்லது 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் நிர்ணயிக்கப்பட்ட அதிகூடிய விலைக்கு விநியோகிக்கப்பட வேண்டும்.<br>(ஆ) பின்வரும் விபரங்கள் உள்ளடக்கிய எவரேனும் ஆள் அல்லது பாவனையாளருக்கு அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் வடிவிலான பற்றுச்சீட்டு/ விலைப்பட்டியல் வழங்கப்பட வேண்டும் மற்றும் அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருக்க வேண்டும்:-<br>(i) பற்றுச்சீட்டு/ விலைப்பட்டியல் இல;<br>(ii) கொடுக்கல் வாங்கல் சில்லறையா அல்லது மொத்த விற்பனையா என்பது;<br>(iii) விற்பனைத் திகதி;<br>(iv) விற்கப்பட்ட பொருட்களின் அளவு;<br>(v) விற்கப்பட்ட பொருட்களின் வகை;<br>(vi) விற்கப்பட்ட பொருட்களின் அலகொன்றின் பெறுமதி;<br>(vii) விற்கப்பட்ட பொருட்களின் மொத்த பெறுமதி;<br>(viii) ஏதேனுமிருப்பின், தொகுதி இல; அத்துடன்<br>(ix) எவரேனும் ஆள் அல்லது பாவனையாளரின் பெயரும் முகவரியும்.<br>(இ) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினால் எழுத்துமூலம் வழங்கப்பட்ட அறிவித்தலிலுள்ள அறிவுறுத்தல்கள் ஏனைய நபரிற்கு மொத்தமாகவோ சில்லறையாகவோ பொருட்களை விற்றல் அல்லது விநியோகித்தல், விற்பனை அல்லது விநியோகத்திற்காக பொருட்களை இறக்குமதி செய்தல் அல்லது அத்தகைய காரணங்களிற்காக சேவைகள் வழங்குதலில் இடையூறு ஏற்படுத்தும் ஏதேனும் காரணிகள் நிகழும் சந்தர்ப்பத்தில் பின்பற்றப்பட வேண்டும். |

**தவிசாளர்**
**பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை**
**கொழும்பு, 2022.**

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2021/2022

www.ugc.ac.lk

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிகோரும் பொருட்டு 2021 கல்வியாண்டில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆகக் குறைந்த தேவைகளைத் திருப்தி செய்துள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும். பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைகளை யார் திருப்தி செய்துள்ளார்கள் என்பதை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

**பல்கலைக்கழக அனுமதிக்கு இணைய வழி ஊடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.**

## பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமைகள்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானோர் என அறிவிக்கப்பட்டுள்ள, பரீட்சார்த்திகள் பெற்றிருக்க வேண்டியவை.

(அ) அங்கீகரிக்கப்பட்ட சகல மூன்று பாடங்களிலும் ஒரே தடவையில் குறைந்தது சாதாரண சித்தி (S)களை ஆகக் கூடுதலாக 3 அமர்வுகளுள் பெற்றிருத்தல்.

> **முக்கியம்**
> பல்கலைக்கழகம் அல்லது நிறுவகமொன்றிற்கு மருத்துவ பட்டக் கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படும் மாணவர் ஒவ்வொருவரும் இலங்கை கல்விப் பொதுத் தராதரப் (உயர்தரப்) பரீட்சை அல்லது அதற்கு இணையான பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் பாடங்களில், குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளும் அத்துடன் ஒரு சாதாரண சித்தியிலுமான தராதரங்களுடன் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (2021.04.10 அன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமாணி எண். 2222/69 இன் படி.)

(ஆ) பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகள் பெற்றிருத்தல்.

**குறிப்பு 1:** **பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் Z புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவாயினும் நடப்பு வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கு தகுதியற்றவர்களாவர்.**

**அவ்வாறான ஒரு விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட தேவையை முந்திய தடவையில் அதாவது க.பொ.த. (உ/த) பரீட்சையின் அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் ஆகக் குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்று பூர்த்தி செய்திருப்பின்இ அவ்விண்ணப்பதாரி தற்போது தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை உரிய பல்கலைக்கழகத்தில் தொடர்வதற்காக பதிவு செய்வதற்குத் தகுதி பெறுவர்.**

**ஏற்கனவே அனுமதிக்குத் தெரிவாகி பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகளையேனும் பெற்றுக்கொள்ளாத மாணவரொருவர் அடுத்துவரும் பல்கலைக்கழக அனுமதிக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் பொது சாதாரண வினாத்தாள் பரீட்சையில் தோற்றி குறிப்பிட்ட தேவையைப் ர்த்தி செய்தால் மட்டுமே ண புள்ளிகளின் அடிப்படையில் ஏற்கனவே தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை எதிர்வரும் கல்வியாண்டொன்றில் குறித்த பல்கலைக்கழகத்தில் தொடர்வதன் பொருட்டு பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.**

## 2021/2022 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி கையேட்டினை பெற்றுக்கொள்ளும் முறை

2021/2022 ம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலொன்றை, கீழ்வரும் முறைகளில் 05.09.2022, ஆம் திகதியிலிருந்து ஒரு கைநூலிற்காக ரூபா. 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகம், இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07.

ஆ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட விநியோக முகவர்களிடமிருந்து (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ள விநியோக முகவர்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது).

இ. தலா ரூபா 1000/-ஐ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கணக்கில் வைப்பில் இட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து www.ugc.ac.lk பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் மென்நகலினை பதிவிறக்கம் செய்யலாம்.

ஈ. பல்கலைக்கழக அனுமதிக் கைநூலினை தபால் மூலமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதற்காக வேண்டி இலங்கை வங்கியின் ரொறிங்ரன் கிளையிலுள்ள ப.மா.ஆ. திரட்டுக் கணக்கு இலக்கம் 0002323287 இன் அல்லது மக்கள் வங்கியின் நகர மண்டபக் கிளையிலுள்ள திரட்டுக் கணக்கு இலக்கம் 167-1-001-4-3169407 இற்கு வரவு வைக்கும் விதமாக, இலங்கை வங்கியின் அல்லது மக்கள் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் ஒவ்வொரு கைநூலுக்கும் ரூபா 1000/- இனைச் செலுத்தி பெற்றுக்கொண்ட கொடுப்பனவு பட்டோலை, அனுமதிக் கைநூலிற்கான எழுத்து மூல வேண்டுகோளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும், குறித்த பணத்தை செலுத்தியமைக்கான வங்கியின் இலச்சினை பொறிக்கப்பட்டு அதிகாரமுடைய அலுவலர் ஒருவரினால் கொடுப்பனவு பட்டோலையில் முறையாக ஒப்பமிடப்பட்டிருக்கவும் வேண்டும்.

அவ்வாறு வங்கிக் கொடுப்பனவுப் பட்டோலையை அனுப்பி அனுமதிக் கைநூலினை தபால் மூலமாகப் பெற்றுக் கொள்ளும் போது விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் விண்ணப்பதாரி பெற விரும்பும் அனுமதிக் கைநூலின் மொழிமூலம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சுய முகவரியிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான 37செ.மீ x 26செ.மீ அளவுக்குக் குறையாத கடிதவுறையொன்றுடன் எழுத்து மூல கோரிக்கையொன்றினை பிரதிச் செயலாளர் (பல்கலைக்கழக அனுமதிகள்), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு விண்ணப்பதாரி அனுப்பி வைத்தல் வேண்டும்.

## இணையவழி மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் முறை

**பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி மூலம் www.ugc.ac.lk எனும் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாகும்.**

குறிப்பு 2 : **விண்ணப்ப நடைமுறை தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2021/ 2022 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 4 இணை வாசிக்குமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.**

குறிப்பு 3 : **இணைய வழியாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் 2021/2022 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 5 இல் தரப்பட்டுள்ளது.**

குறிப்பு 4 : **இணையத்தள வசதியற்ற விண்ணப்பதாரிகள், நாடெங்கிலுமுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் (OUSL R&Sc), கல்வியமைச்சின் கீழுள்ள மாகாண மற்றும் வலய கணனி வள (ITDLH) நிலையங்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர்களின் (ICTA) கீழான நெனசல நிலையங்கள் ஆகிய நிலையங்களுளொன்றுக்கு அவர்களது அலுவலக நேரங்களில் சென்று எதுவித கட்டணமுமின்றி (இலவசமாக) பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி மூலமாக விண்ணப்பிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான வசதிகள் செய்யப்பட்டுள்ள நிலையங்கள் பற்றிய விபரம் 2021/2022 ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் பகுதி 5 இன் இறுதியில் தரப்பட்டுள்ளது.**

குறிப்பு 5 : **2021/2022 ஆம் கல்வியாண்டிலிருந்து பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க செல்லுபடியான தேசிய அடையாள அட்டையினை விண்ணப்பதாரிகள், கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.**

குறிப்பு 6 : **பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி விண்ணப்பத்தை நிரப்புவதில் சிரமங்கள் ஏதும் ஏற்படின் அரச தகவல் நிலையத்தினைத் (1919) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தகவல் நிலையத்தினைத் (011-2695301, 011-2695302)தொடர்புகொண்டு அறிவுறுத்தல்களைப் பெறலாம்.**

## இணையவழி விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி

**விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி 23.09.2022ஆம் திகதி ஆகும்.** குறித்த 23.09.2022ஆம் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என பரீட்சார்த்திகள் அனைவரும் அறிவிக்கப்படுகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து, இணையவழி விண்ணப்பத்தொகுதியிலிருந்து பெறப்படும் இணையவழி விண்ணப்பப்படிவ அச்சுப்பிரதியை **பிரதிச் செயலாளர் (பல்கலைக்கழக அனுமதிகள்). பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு. இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு-07** என்று முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

அச்சிடப்பட்ட இணையவழி விண்ணப்பம் A4 தபாலுறையிலிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

அச்சிடப்பட்ட இணையவழி விண்ணப்பம் பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வருகைதந்து விண்ணப்பத்தை நேரில் கையளிக்க முடியாது.

## பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியின்மை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் உள்வாரி மாணவர்களாக அனுமதிக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூல் கல்வியாண்டு 2021/2022 பிரிவு 1.7 இற்கு அமைய பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் தகுதியற்றோராவார்.

1. க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு மூன்றுக்கு (3) மேற்பட்ட அமர்வுகளில் தோற்றிய மாணவர்கள்.
2. 1978 இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் / உயர் கல்வி நிறுவனத்தில் கற்கைநெறியொன்றிற்கு உள்வாரி மாணவர்களாகப் பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள். (இப் பந்தியின் கீழ்வரும் பல்கலைக்கழகங்களினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் பெயர்கள் 2021/ 2022 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 1.6(8) மற்றும் 1.6(10) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது)
3. 1978 இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டம் அல்லாத ஏனைய பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது ஏனைய உயர்கல்வி நிறுவனமொன்றில் முதல் பட்டப்பயில் நெறிகளுக்காக இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

**அவையாவன:**

i. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்
ii. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
iii. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (As Enlisted Officer Cadets)
iv. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
v. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (2017 ஆண்டிலும் அதன் பின்னரும் பதிவு செய்த மாணவர்கள்)

4. கல்வியியற் கல்லூரி (College of Education) ஒன்றில் கற்கைநெறியொன்றினை தொடர்வதற்காக உள்வாரி மாணவர்களாக பதிவு செய்த / பதிவு செய்திருக்கின்ற மாணவர்கள்.
5. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழ் வருகின்ற பல்கலைக்கழக கல்லூரிகளில் (University College) மூன்று (03) வருட டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.
6. கீழே பந்திகள் "முக்கியம்" என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பின்வரும் நிறுவனங்களில் 03 வருடங்கள் அல்லது அதற்கதிகமான காலப்பிரிவிற்கு கீழ் காட்டப்பட்டிருக்கும் கற்கை நெறியொன்றைப் பயில்வதற்கு முழுநேர மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

(அ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி. - HND)

(ஆ) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA), எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் (IET), இயந்திரவியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (இ.வி.தே.டி - NDES)

**முக்கியம் :**

ஆயினும் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி. - HND) அல்லது / அத்துடன் தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (பொ.வி.தே.டி- NDES) ஆகிய மூன்று வருட கால அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தினைக் கொண்ட முழுநேர கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்த மாணவரொருவர் தமக்கு இந்நிறுவனங்களில் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித்தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவினை மீளப்பெற்றுவிட்டால் மாத்திரமே பின்னைய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978 ஆம் ஆண்டின் 16ம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனமொன்றில் கற்கைநெறி ஒன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

மேலே பந்தி 6 இல் குறிப்பிடப்பட்ட நிறுவனமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறியொன்றிற்குப் பதிவுசெய்த மாணவரொருவர், பதிவுசெய்வதற்கு கொடுக்கப்பட்ட இறுதித்திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவை மீளப்பெறாவிட்டால், அவர் மேலே பந்தி 6 இல் குறிப்பிட்ட பிரிவில் வருவதுடன் பின்னைய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கற்கை நெறியொன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவார்.

ஆயினும், மேலே குறிப்பிட்ட இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி.- HND) அல்லது தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (பொ.வி.தே.டி- NDES) ஆகிய கற்கைநெறிகளுக்கு வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேலே பந்தி 6 இல் குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 60 நாட்களுக்குள் பதிவினை மீளப்பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான சலுகை வழங்கப்பட மாட்டாது.

குறிப்பு 7 : **மேலே பந்தி 6 இல் குறிப்பிட்ட ஓர் கற்கை நெறிக்கு பதிவுசெய்வதற்காக கொடுக்கப்பட்ட இறுதித் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிறுவகமொன்றிலிருந்து பதிவை மீளப்பெற்ற மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பித்ததுடன் குறித்த நிறுவனத்தில் பதிவை மீளப்பெற்றமை தொடர்பான கடிதத்தின் பிரதியையும் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.**

7. முதலாவது பட்டமட்டத்தில் கற்கை நெறியொன்றைக் கற்பதற்கு உயர் கல்வி அமைச்சினூடாக வழங்கப்பட்ட வெளிநாட்டுப் புலமைப் பரிசிலொன்றை ஏற்றுக்கொண்ட மாணவர்கள்.
8. மேலே 2,3,4,5,6 மற்றும் 7 ஆம் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகளிலிருந்து முதல் பட்டமொன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றைப் பெற்றுக்கொண்ட மாணவர்.
9. தற்போதைய கல்வியாண்டில் அல்லது முன்னைய கல்வியாண்டு ஒன்றில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது தவறான பிரகடனங்களைச் செய்த மாணவர்கள் / மற்றும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் மாணவர்கள்.

குறிப்பு 8 : **பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட முன்னர் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய் / தவறானவை எனக் கண்டறியப்பட்டால் அக் கல்வி ஆண்டிற்கான அவரின் தேர்வு மற்றும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படுவதுடன் ஏனைய எவ் எதிர்கால கல்வியாண்டிலும் மீண்டும் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.**

**மேலும், பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டதன் பிற்பாடு பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய் / தவறானவை என எவ்விதத்திலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அம்மாணவரை பல்கலைக்கழகத்தில் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.**

## இதர முக்கிய தகவல்கள்

### a. விண்ணப்பத்தில் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான விருப்பொழுங்கைக் குறிப்பிடுதல்

2021/2022 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற 16 தேசிய பல்கலைக்கழகங்களினாலும், 2 வளாகங்களினாலும் 4 உயர்கல்வி நிறுவனங்களினாலும் 123 வெவ்வேறு கற்கைநெறிகள் நடாத்தப்படும்.

குறித்தவொரு பல்கலைக்கழகத்தினால் / வளாகத்தினால் / நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கைநெறி ஒவ்வொன்றிற்கும் தனியானதொரு குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீடுகள் "யுனி கோட்" (Uni-Code) என அழைக்கப்படும். மொத்தமாக 251 "யுனி கோட்" (Uni-Code) கள் உள்ளன. "Uni-Codes"களின் பட்டியல் 2021/2022 ஆம் கல்வியாண்டிற்குரிய கையேட்டின் 133-138ம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

மாணவர்கள் தாம் தகுதி பெற்றுள்ள எவ்வளவு எண்ணிக்கையான யுனி-கோட்களுக்கும் (அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் கற்கைநெறிகள் எத்தனைக்கும்)விண்ணப்பிக்க முடியும். மாணவர்கள் சகல 251 "Uni-Codes" களுக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதிபெறமாட்டர். விண்ணப்பதாரியினது யுனி-கோட் (Uni-Code) தெரிவுகள் அவர் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தோற்றிய பாடங்களின் அடிப்படையில் அமையும். ஆயினும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தில் ஆகக்கூடுதலாக 125 தெரிவுகள் வரை குறிப்பிடலாம்.

அவர்கள் தங்கள் "Uni-Code" களை அதிகூடிய விருப்பு யுனி-கோட் இலிருந்து அதிகுறைந்த விருப்பு யுனி-கோட் வரை ஒழுங்குபடுத்தல் வேண்டும். ஒழுங்குபடுத்தலானது, மாணவனது மனதில், யுனி-கோட்களில் உள்ள ஆர்வம் குறைந்து செல்லும் வரிசையைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும். மாணவர்கள் தமது விருப்பொழுங்கில் ஒரே யுனி-கோட்டை (Uni-Code) ஒரு தடவைக்கு மேல் பதிய அனுமதிக்கப்பட மாட்டர்.

### தெரிவின் போது கற்கைநெறியும் பல்கலைக்கழகமும் ஒன்றாகவே கருத்திற்கொள்ளப்படும்.

மாணவர்கள் தங்களது விண்ணப்பத்தை நிரப்பும் போது தாம் தகுதிபெறுகின்ற ஆகக் கூடிய எண்ணிக்கையான யுனி-கோட்களைக் குறிக்குமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்பதாரிகள் தாம் விருப்புரிமை வழங்கிய கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு மாத்திரமே கருத்திற் கொள்ளப்படுவர். விண்ணப்பதாரியெவரும் அவர் வேண்டிக்கொள்ளாத (விண்ணப்பிக்காத) யுனி-கோடொன்றுக்கு (Uni-Code) அனுமதிக்கப்படமாட்டார். இதன்படி, குறித்தவொரு பல்கலைக்கழகத்தின் குறித்தவொரு கற்கைநெறிக்கு அனுமதி பெறப் போதுமான z-புள்ளியை விண்ணப்பதாரியொருவர் பெற்றிருப்பினும், அவ்விண்ணப்பதாரி அதற்குரிய யுனி-கோட்டைத் தனது விண்ணப்பத்தில் கோரியிராதவிடத்து, அந்த யுனி-கோட் (Uni-Code) (அதாவது அதற்குரிய பல்கலைக்கழகமும் கற்கைநெறியும்) அவ்விண்ணப்பதாரிக்கு வழங்கப்படமாட்டாது. அதற்குப் பதிலாக அவர் தனது விருப்பொழுங்கில் அடுத்த தெரிவாகக் குறிப்பிட்டுள்ள கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் ("Uni-Code") அனுமதிக்கப்படுவது பற்றியே பரிசீலிக்கபடுவார்.

குறிப்பு 9 : **"யுனி-கோட்" களை பயன்படுத்தி விருப்பொழுங்கைக் குறிப்பிடுவது தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2021/2022 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 3 ஐ வாசிக்குமாறு மாணவர்கள் ஆலோசனை கூறப்படுகின்றனர்.**

குறிப்பு 10 : **தெரிவுசெய்யப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு (Uni-Code) மாணவர் ஒருவர் பதிவு செய்யாது விடின், எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் அதே கற்கைநெறியை வேறு பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கு மாணவரது விண்ணப்பபடிவத்தில் அவற்றிற்கு உயர் தெரிவு வழங்கப்பட்டிருப்பினும் அனுமதிக்கு கருத்தில் கொள்ளப்பட மாட்டார். பதிலாக, அவர்களது விண்ணப்பத்தில் அடுத்த விருப்பொழுங்கிலுள்ள கற்கைநெறியிற்கு அவர்கள் கருத்தில் கொள்ளப்படுவர்.**

**கல்வியாண்டு 2021/2022 க்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பக்கம் 106-107 இல் வழங்கப்பட்டுள்ள "முக்கியம்" எனும் பகுதியை படிப்பதன் மூலம் மாணவர்கள் இது தொடர்பில் மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.**

### b. செயன்முறை / உளச்சார்பு பரீட்சை சித்தி பெறுவதற்கான தேவைப்பாடு

கீழே பட்டியலிடப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்கு அனுமதி பெறல் பற்றி பரிசீலிக்கப்பட விரும்பும் பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தினால் / உயர்கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைய வேண்டும். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனம் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும் என்பதுடன் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை மாணவர்கள் நேரடியாகவே உரிய பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் அல்லது நிறுவனத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் / உயர்கல்வி நிறுவனங்களின் தொலைபேசித் தொடர்பு இலக்கங்கள் பக்கம் 179 இல் தரப்பட்டுள்ளது.எவ்வாறாயினும், குறித்த கற்கைநெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு செயன்முறை / உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேலதிகமாக உரிய கற்கைநெறியின் வெட்டுப் புள்ளித் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்திருப்பதும் கட்டாயமாகும்.

| கற்கைநெறி | பல்கலைக்கழகம்/ வளாகம்/ நிறுவகம் | Uni Code |
|---|---|---|
| கலை (SP) - வெகுசன ஊடகம் | கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம் | 020S |
| கலை (SP) - அரங்கேற்றல் கலை | கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம் | 041S |
| கட்டடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 023G |
| வடிவமைப்பு | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 024G |
| முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் | களனிப் பல்கலைக்கழகம் | 027D |
| நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 034G |
| தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 038K |
| தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | வவுனியா பல்கலைக்கழகம், இலங்கை | 038R |
| கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 065U |
| தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 066U |
| இசை | இராமநாதன் நுண்கலைக்கழகம் | 068X |
| இசை | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 068Y |
| இசை | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 068Z |
| நடனம் | இராமநாதன் நுண்கலைக்கழகம் | 069X |
| நடனம் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 069Y |
| நடனம் | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 069Z |
| சித்திரமும் வடிவமைப்பும் | இராமநாதன் நுண்கலைக்கழகம் | 070X |
| நாடகமும் அரங்கமும் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 071Y |
| நாடகமும் அரங்கமும் | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 071Z |
| கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 072Y |
| கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 075U |
| உடற்றொழில் கல்வி | யாழப்பாணப் பல்கலைக்கழகம் | 081E |
| உடற்றொழில் கல்வி | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 081L |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 082C |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | களனிப் பல்கலைக்கழகம் | 082D |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 082L |
| பேச்சும் செவிமடுத்தலும் விஞ்ஞானமும் | களனிப் பல்கலைக்கழகம் | 083D |
| கட்புலக் கலை | கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 085Z |
| விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவமும் | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 090U |
| தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 091G |
| தகவல் முறைமைகள் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 096C |
| தகவல் முறைமைகள் | கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி | 096T |
| நிலத்தோற்றக் கட்டிடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 097G |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | களனிப் பல்கலைக்கழகம் | 098D |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 098E |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை | 098H |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 098L |
| சினிமா தொலைக்காட்சி பற்றிய கற்கைகள் | களனிப் பல்கலைக்கழகம் | 100D |
| நிதி பொறியியல் | களனிப் பல்கலைக்கழகம் | 110D |

### c. தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு பதிவினை மேற்கொள்ளல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2021/2022 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த z - பெறுபேறுகள் (வெட்டுப்புள்ளிகள்) வெளியிடப்பட்ட பின், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படும். பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் 1.6(5), 1.6(6), மற்றும் 4.1 ஆம் பந்திகளுக்கமைய, மாணவன் தரப்பட்ட வாய்ப்பை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யின், வங்கியில் அல்லது இணையவழி ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்கிற்கு பதிவுக் கட்டணமான ரூபா 50/- இனை வரவுவைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் தாம் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு பதிவுசெய்தல் வேண்டும்.

மேலும் இணையத்தினூடாக பதிவு செய்யும் போது வங்கி மூலமாக கட்டணம் செலுத்தப்படின் ஸ்கேன் செய்யப்பட்ட கட்டணப் பற்றுச்சீட்டு பதிவேற்றப்பட்டு (Upload) உறுதி செய்துகொள்வதன் பொருட்டு இணையத்தினூடாக ப.மா.ஆ. இற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இணையதளத்தில் பதிவு செய்த பின்னர், அச்சுப்பிரதி செய்யப்பட்டு சரியான முறையில் ஒப்பமிடப்பட்ட இணையதள பதிவுப் படிவத்துடன் (Online Payment Receipt) வங்கியில் செலுத்தியிருப்பின் தேவையான கொடுப்பனவை செலுத்தியமைக்கான அத்தாட்சி பத்திரத்தின் [Paying-in-Voucher] இனையும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

குறிப்பு 11 : **தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறி, பல்கலைக்கழகத்திற்கு இணையவழி ஊடாக பதிவுசெய்தலும் 2021/ 2022ம் கல்வியாண்டிற்குக் கட்டாய தேவையாகும் என்பதை கருத்தில் கொள்க.**

குறிப்பு 12 : **பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் வெளியிலும் பகிடிவதை உட்பட எல்லா வகையான வன்முறைகளில் இருந்தும் தவிர்ந்து கொள்வதாக சத்திய கடதாசி (Affidavit) ஒன்றினை தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறிக்கு பல்கலைக்கழகத்தில் பதிவினை மேற்கொள்ளும் போது மாணவர்கள் அனைவரும் ஒப்பமிடுதல் வேண்டும். அவ் சத்திய கடதாசி மாணவரினாலும், அவர்களது பெற்றோரினாலும் ஒப்பமிடப்படல் கட்டாயமாகும்.பெற்றோர் இல்லாத பட்சத்தில் மாணவர் மற்றும் மாணவரது சட்ட ரீதியான பாதுகாவலரினால் ஒப்பமிடப்பட வேண்டும்.**

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

## 2021/2022 ம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விநியோக முகவர்கள்

### 01. கொழும்பு

எஸ். கொடகே அன்ட் பிரதர்ஸ், 675, மருதானை வீதி, கொழும்பு 10.
சதீபா புத்தக நிலையம், 1060, மருதானை வீதி, பொரல்லை, கொழும்பு 08.
விஜிதா யாபா புத்தக நிலையம், 130, எஸ்.டீ.எஸ். ஜயசிங்க மாவத்தை, கொகுவல, நுகேகொட.
விஜிதா யாபா புத்தக நிலையம், யுனிட்டி பிளாஸா, 02, காலி வீதி, கொழும்பு 04.
விஜிதா யாபா புத்தக நிலையம், 32, தேர்ஸ்டன் வீதி, கொழும்பு 03.
விஜிதா யாபா புத்தக நிலையம், G 6 A, கிரஸ்கட் பொல்வாட், கொழும்பு 03.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 30, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 44/9, வை.எம்.பீ.ஏ. கட்டடம், கோட்டே.
சரசவி புத்தக நிலையம் (கடை), 70/1/5, வை.எம்.பீ.ஏ. கட்டடம், பொரல்லை.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 74, ஹைலெவல் வீதி, மஹரகம.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 92A, பாராளுமன்ற வீதி, பெலவத்த , பத்தரமுல்ல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 592, மருதானை வீதி, கொழும்பு 10
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்)லிமி.,4ஆம் மாடி, வன் கோல்பேஸ் மால் ,கொழும்பு 02
சசிரி பிரைவேற் லிமி., 14, ஹைலெவல் வீதி, மஹரகம.
சரசவி மார்கெட்டிங் என்டர்பிரைசஸ், UG 19, பீப்பில்ஸ் பார்க், குணசிங்கபுர, கொழும்பு 11.
பூபாலசிங்கம் புத்தகசாலை, 340, செட்டியார் தெரு, கொழும்பு 11.
துசித்த புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 433 Q, காலி வீதி, ரத்மலானை.
சித்துறுவன புத்தக நிலையம், 08, இங்கிரிய வீதி, பாதுக்க.
விக்டரி புத்தக நிலையம், 21, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை.
சனிலா புத்தகசாலை, 323, கடுவல வீதி, பத்தரமுல்ல.
சதரகா புத்தக நிலையம், 09, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
சீவலி புத்தக நிலையம், A/39, குறுக்கு வீதி, ஹன்வெல.
சித்துமின புத்தக நிலையம், 62, பிரதான வீதி, அதுருகிரிய.
சமுத்ரா புத்தக நிலையம், இல. 1141, மருதானை வீதி, பொரெல்ல.
நலன்புரி சங்கம், ப.மா.ஆ., இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07.
சந்தலி புத்தக நிலையம், 76/4, சேனாநாயக்க கட்டிடத் தொகுதி, ஹோமாகம.
ஸ்டைலீஸ் புத்தக நிலையம், 18/B, டி மெல் லேன், மொரட்டுவ.
ஸ்ரீ லங்கா புத்தக நிலையம், இல. 27, பிரதான வீதி, பிலியந்தல
ஒனேரோ பொத் மெதுர, 87 ஹைலெவல் வீதி, மஹரகம.
விதுலக கல்வி வெளியீடு (பிரைவேற்) லிமி., 50/22, மஹமேக வத்தை, மஹரகம.
கிரந்தாலோக அச்சகம் மற்றும் புத்தக நிலையம், 12, ஹைலெவல் வீதி, கொட்டாவ, பன்னிபிட்டிய.
சரசவி நிலையம் (பிரைவேற்) லிமி., 02, ஸ்டென்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 02 B, சமுத்ராதேவி மாவத்தை, நுகேகொட.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 24, ஹில் வீதி, தெஹிவல.
சரசவி புத்தக நிலையம் 20A, ஹில் வீதி, தெஹிவல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 70/1/2, Y.M.B.A. கட்டிடம், கொழும்பு 8.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 14, உத்யான வீதி, பிலியந்தல
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., இல. 47, இக்கொனமிக் சென்டர், நாரஹேன்பிட்டி.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 147, புனித. மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 3.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., மகளிர் கல்லூரி, இல. 66, ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7.
சரசவி புத்தக நிலையம், 16 ஹோரண வீதி, பாதுக்க.
சரசவி புத்தகசாலை(பிறைவட்)லிமி, இல. 413, பௌத்தலோக மாவத்த, கொழும்பு 07.
நியு கயான் புத்தக நிலையம், இல. 14, ஹைலெவல் பிளாசா செல்கந்த,நுகேகொட.
லும்பினி பொத்த மதுர, இல. 17, சரனபால ஹிமி மாவத்த, பிலியந்தல.
நியு சேனாதீர புத்தக நிலையம், இல. 13, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
திநென புத்தக நிலையம், 28/ஊ, ஸ்டேஷன் வீதி, ஹோமாகம.
ஆசிரி புத்தக நிலையம், இல. 10, பாதுக்க வீதி, ஹோடகம, ஹோமாகம.
சிதுருவன புத்தகசாலை(பிறைவட்)லிமி, 61, பிரதான வீதி, ஹங்வெல்ல
சிதுருவன புத்தகசாலை(பிறைவட்)லிமி, 112, ஹய் லெவல் வீதி, மீப்பே சந்தி, பாதுக்கை
சிதுருவன புத்தகசாலை(பிறைவட்)லிமி, 20, எம்.டி.எச்.ஜயவர்தன மாவத்தை, ஹொரன வீதி, பாதுக்கை
சரசவி புத்தகசாலை(பிறைவட்)லிமி, 1/50, வை.எம்.பி.எ கட்டடம், பொரல்ல
சரசவி புத்தகசாலை(பிறைவட்)லிமி, 82, மொறட்டுவ வீதி, பிலியந்தல
சரசவி புத்தகசாலை(பிறைவட்)லிமி, 175, ஹொரண வீதி, கொட்டாவ, பன்னிபிடிய
மெக்மிலன் புத்தகசாலை, 195, ஒல்கோட் மாவத்தை, கொழும்பு 11
சுசார வெளியீடுகள்(பிறைவட்)லிமி, 180/43, பீபள்ஸ் பார்க், கொழும்பு 11
சுசார வெளியீடுகள்(பிறைவட்)லிமி, 65, மாகொல வீதி, கிரிபத்கொட
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 217, ஒல்கொட் மாவத்த, கொழும்பு 11.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 27, காலி வீதி, பம்பலபிட்டிய.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 1129, மருதானை வீதி, கொழும்பு 08.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 04, கண்டி வீதி, , கிரிபத்கொட.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 133D, வஜிர வீதி, கொழும்பு 05.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 20, சென் செபஸ்டியன் மலை, கொழும்பு 12.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 73, இரத்தினபுர வீதி, அவிசாவளை.
சந்ர அச்சகம், இல. 89, ஹொரண வீதி, பிலியந்தல.
சந்ர அச்சகம், இல. 13, ஹொரண வீதி, பொல்கஸ்சோவிட்ட.
நிக்கோலி அச்சகம், இல.62, தெஹிவல வீதி, மஹரகம.
சிதுமின புத்தக நிலையம், 8A, கொடகம வீதி, அதுருகிரிய.
லுமினேக்ஸ் (பிரைவேட்) லிமி., 646, காலி வீதி, மொறட்டுவ
லுமினேக்ஸ் (பிரைவேட்) லிமி., இல. 91/B, ஹொரண வீதி, பிலியந்தல.
எவ்வாறாயினும் டாக்டர்கள், தாதியர்கள் மற்றும் பொறியியலாளர்கள் தவிர்ந்த ஏனைய 50 வயது நிறைவடைந்த அரசாங்க ஊழியர்கள் இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி ஓய்வுபெற முடியும் என பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதுதொடர்பான சுற்றுநிருபம் இரண்டு வாரங்களுக்குள் அமைச்சினால் வெ ளியிடப்படவுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சு ஓய்வுபெறும் வயதெல்லை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதியில் சுமார் 20,000 அரசாங்க ஊழியர்கள் ஓய்வுபெறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்கான...

மாதங்களில் மேற்படி தொகையை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு இம்மாதத்தில் கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

அதுதொடர்பில் அமைச்சு தெரிவிக்கையில், நிதி கிடைக்காமை காரணமாக கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்கு உணவுக்கான கொடுப்பனவு வேலைத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததாகவும் எனினும் தற்போது அதற்கான நிதி கிடைத்துள்ள நிலையில் சில கட்டங்களாக நாடளாவிய ரீதியில் அந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்கு உணவுக்காக வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவை அதிகரிப்பதற்கான யோசனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நடிகை தமிதா நேற்று...

ஜனாதிபதி செயலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தமிதா அபேரத்ன விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

## வெள்ளவத்தை கடற்பகுதியில்...

முதலை குட்டியொன்றை பிடித்துள்ளார். குறித்த முதலைக் குட்டியை வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது, சவோய் சினிமாவிற்கு அருகில் உள்ள கால்வாயில் நான்கு பெரிய முதலைகளை அவதானிக்கப்பட்ட நிலையில், வெள்ளவத்தை கடற்பகுதியில் 40 முதலைகளை கண்டுபிடித்துள்ளனர்.

இந்த முதலை அச்சுறுத்தல் குறித்து கின்ரோஸ் உயிர்காப்பு நிறுவனம் வனவிலங்கு அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. இதனால் கடலில் குளிப்பதும் ஆபத்தாக மாறியுள்ளது. கடந்த வருடம் தெஹிவளையில் மீனவர் ஒருவர் முதலையால் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் கடலில் குளிக்க செல்லும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## முட்டை, கோழி இறைச்சி...

அரசாங்கம் தலையிட்டு சலுகைகளை வழங்கினால் விலையை குறைக்க முடியும் என சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர கூறினார்.

“இந்த மாதம் முதல் நீர் கட்டணம், மின் கட்டணம் உயர்த்தப்படுகிறது. கோழிப்பண்ணைத் தொழில் நீர் மற்றும் மின்சாரத்தை அதிகம் பயன்படுத்துகிறது. இந்த அதிகரிப்புடன், வற் வரி 12% இல் இருந்து 15% ஆக அதிகரித்துள்ளது. புதிய பாதுகாப்பு வரி 2.5% விதிக்கப்பட்டுள்ளது. இது இறுதி உற்பத்திக்கு சுமார் 7.5% அதிகரிக்கலாம். அனைத்து சூழ்நிலைகளிலும், உற்பத்திச் செலவைப் பொறுத்து கோழி இறைச்சியின் விலை உயரும் வாய்ப்புள்ளது. இது குறித்து அமைச்சரிடம் திங்கட்கிழமை விவாதிப்போம். குறிப்பாக முட்டையின் கட்டுப்பாட்டு விலையில் இருந்து விடுபடுவது எப்படி என கலந்துரையாடுவோம்.

தற்போது 50% உற்பத்தியாளர்கள் முட்டையின் கட்டுப்பாட்டு விலையால் இத்தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர். முட்டையிடும் விலங்குகள் கூட இறைச்சிக்காக சந்தைப்படுத்தப்படுகின்றன என்றார்.

## பப்புவாவில் திருடிய...

செய்துள்ளனர்.

அம்பாறை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குறித்த வலம்புரி சங்கை ஒரு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய தயாராக இருந்தமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் உரகஸ்மன்ஹந்திய பிரதேசத்தை சேர்ந்தவர்.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, அவர் பணிபுரிந்த பப்பு வா நியூகினியாவில் உள்ள பழங்கால பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிலிருந்து வலம்புரிச் சங்கை திருடி நாட்டுக்கு கொண்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

## ஜனாதிபதி முன்னிலையில்... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதுடன் நேற்று 38வது இராஜாங்க அமைச்சராக பிரேமலால் ஜயசேகர சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

துறைமுகங்கள் மற்றும் விமான சேவை இராஜாங்க அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ள அவர், உடனடியாகவே கொழும்பு உலக வர்த்தக மையத்திலுள்ள அவரது அமைச்சுக்குச் சென்று பொறுப்புக்களை பொறுப்பேற்றுக்கொண்டார்.

1997 ஆம் ஆண்டு நிவித்திகல பிரதேச சபை தலைவராக தெரிவு செய்யப்பட்ட அவர், 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவானார்.

மஹாவலி அபிவிருத்தி மற்றும் மலைநாட்டு அபிவிருத்தி பிரதியமைச்சராக நியமிக்கப்பட்ட அவர், 2005 ஆம் ஆண்டு கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு பிரதியமைச்சராகவும் 2007 ஆம் ஆண்டு அமைச்சரவை அந்தஸ்தற்ற கைத்தொழில் அமைச்சராகவும் 2010 ஆம் ஆண்டு எரிசக்தி, மின்சக்தி பிரதியமைச்சராகவும் பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒழுங்கைப் பேணுவதன்... 03ஆம் பக்கத் தொடர்

போது உறுதியளித்தார். இலங்கையின் இளம் அரசியல்வாதிகளில் ஒருவரான இவர், மத்திய மாகாண முன்னாள் அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் இதற்கு முன்னர் இருந்த அமைச்சரவையில் துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ. ஜனக பண்டார தென்னகோன், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே, பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி, முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர்கள், தேசிய புலனாய்வுப் பிரதானி, இலங்கை கடலோரக் பாதுகாப்புப்படை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கண்டிய தேச வழமை... 03ஆம் பக்கத் தொடர்

மூலம் கண்டிய தேசவழமை திருமண சட்டத்திற்கு அமைவாக அனைவரதும் திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது 18 ஆகவும் நியமிக்கப்பட்டுள்ளது.

கண்டிய தேசவழமை திருமணம் மற்றும் விவாகரத்து திருத்தச் சட்டமூலம் தயாரிப்பதற்காக கடந்த ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி அதற்கான அனுமதி வழங்கப்பட்ட நிலையில் அதனை விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் நீதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## தேசிய சபைக்கான யோசனை... 03ஆம் பக்கத் தொடர்

உறுப்பினர்கள் 35 பேரை மிஞ்சாத வகையில் தேசிய சபை அமைக்கப்படவுள்ளது. பாராளுமன்ற தெரிவுக்குழுக்களிடமிருந்து அறிக்கைகளை கோரும் வகையில் தேசிய சபைக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்றும் அதற்கான யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, தேசிய சபையை அமைப்பதற்கான யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு பிரதமர் தினேஷ் குணவர்தவின் தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தில் கூடிய கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்து...

அவர், அரசாங்கத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பில் புதிய சட்டங்களை கொண்டுவருவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பில் மகிழ்ச்சியுறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கை தொடர்பான மனித உரிமை பேரவை ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

46/1 யோசனைக்கு இணங்க கடந்த மார்ச் மாதம் இடம்பெற்றுள்ள கூட்டத்தொடரில் இலங்கை சமர்ப்பித்துள்ள விடயங்கள் தொடர்பில் இதன்போதே கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் கடந்த காலங்களில் இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளதாகவும் அத்துடன் பணவீக்கம் அதிகரித்துள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையில் அரசியல் மாற்றம் அவசியமென்பதை சுட்டிக்காட்டியுள்ள நாடா அல் நசீட், பொருளாதாரம் மற்றும் அரசியல் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் தண்டனை பெற்றுக்கொடுக்குமாறு இலங்கையின் சில தரப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் இத்தகைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு தேசிய கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்தை உணர்த்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மேம்பாடு, அமைதி மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் நாட்டில் ஜனநாயகத்தை மேலும் உறுதிப்படுத்துதல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணுதல் ஆகியவற்றுக்காக தேசிய கலந்துரையாடலின் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதந்திரமாக கருத்துக்களை பரிமாறக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துதல் சுயாதீன அமைதியான கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் ஆகியவை தொடர்பிலும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையில் இடம்பெற்றுள்ள ஆர்ப்பாட்டங்களின் போது, நபர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், இதன்மூலம் கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற கடுமையான நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நீதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள அவர் அதன் மூலமாக சரியான பாதையை உருவாக்கிக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

## எந்தவொரு தேர்தலையும்...

அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.களுத்துறை பகுதியில் 11 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டும் என்பதற்காக பொதுஜன பெரமுன அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. பாராளுமன்றில் பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தை ஸ்தாபிக்க நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் கைதியாக சிறைப்பட்டுள்ளார் என எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகின்றனர்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஷவுக்கு ஆசை. ஆனால் பயம் என்பதால் சவாலை ஏற்க அவர் முன்வரவில்லை.

நெருக்கடியான சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்று தற்போது ஜனாதிபதியாகியுள்ளார். எதிர்க்கட்சி தலைவர் பிரதமர் பதவியை பொறுப்பேற்றிருந்தால் அவர் தலைமையில் ஆட்சியமைக்க ஆதரவு வழங்கியிருப்போம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு,சமூக கட்டமைப்பில் தோற்றம்பெற்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே எமது பிரதான வலியுறுத்தலாக அமைந்தது.

பல்வேறு காரணிகளை குறிப்பிட்டுக்கொண்டு எதிர்க்கட்சியினர் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண நிலையான அரசாங்கம் அவசியம். தற்காலிக அமைச்சரவைக்கு பதிலாக நிலையான அமைச்சரவையை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். நிலையான அமைச்சரவை நியமனத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு முன்னுரிமை வழங்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

பொதுஜன பெரமுன ஏனைய அரசியல் கட்சிகளை காட்டிலும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டுள்ளது.பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் முக்கிய அமைச்சு பதவிகளை வகித்தவர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகி தற்போது தங்களின் எதிர்கால அரசியல் இருப்பிற்காக பொதுஜன பெரமுனவை விமர்சிப்பதை தங்களின் அரசியல் செயற்பாடாக முன்னெடுத்துள்ளார்கள் என்றார்.

# வடக்கின் உதயம்

## பேசாலையில் மறைக்கல்வி வாரம் ஆரம்பம்



(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் பேசாலையில் நடப்பு வருடமாகிய 2022ஆம் ஆண்டுக்கான மறைக்கல்வி வாரம் புனித வெற்றி நாயகி ஆலயப்பங்கில் நேற்றுமுன்தினம் (11.09.2022) ஆரம்பமாகியது. இவ்வாரம் முழுவதும் மறைகல்வி வாரம் அனுஷ்டிக்கப்பட்டு எதிர்வரும் 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை நிறைவு பெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு பேசாலை பங்குத் தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் மறைவாழ்வு கொடியேற்றப்பட்டு மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனரின் கூட்டுத்திருப்பலியுடன் தொடக்கி வைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மறைக்கல்வி வாரத்தை முன்னிட்டு மாணவர்கள் மற்றும் மறைவாழ்வு பணியாளர்கள் மத்தேயு, மார்க், லூக்கா மற்றும் யோவான் என நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மாணவர்களுக்கிடையே பேச்சு, கட்டுரை, கவிதை,பைபிள் சார்ந்த விளையாட்டுப் போட்டிகள், கத்தோலிக்க பாட்டுக்குப் பாட்டு மற்றும் கருத்தரங்குகள் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# போக்குவரத்து வசதிகள் இன்மையால் மக்கள் அசௌகரியம்

## 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் வீதிகள்

பரந்தன் குறூப் நிருபர்



முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய பகுதிகளுக்கு முறையான போக்குவரத்து வசதிகள் இன்மையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துவருகின்றனர்.

கிராமங்களில் வாழும் 1000ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட அமைதிபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்பு உள்ளிட்ட பகுதிகளுக்கான பிரதான வீதியாக இது காணப்படுகின்றது. துணுக்காய், அம்பலப்பெருமாள் சந்திவரைக்குமான வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் எந்த வாகனங்களும் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் பாதை ஊடான போக்குவரத்து வசதிகள் எதுவுமே இல்லாத நிலையில் காணப்படுவதாக கிரம மக்கள் தெரிவிக்கின்றனர். யுத்தத்தின் பின்னரான குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்ட இப்பகுதிகளின் அடிப்படை வசதிகள் இன்று வரையும் பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே தமக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுத்தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும் எந்த விமோசனமும் இல்லையென மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தமது கிராமங்களில் எந்த தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. அதாவது அடிப்படை மருத்துவ வசதிகளைப் பெறக்கூடிய மருத்துவமனைகள், மேலதிக கல்வி நிலையங்கள், உயர்தர வகுப்புக்கள் உள்ளிட்ட எந்த தேவைக்கும் 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கிளிநொச்சிக்கு செல்லவேண்டும்.

எனவே, தமது கிராமங்களுக்கான பிரதான வீதிகளை புனரமைத்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கு ஆளுநர் உதவ வேண்டும் உறவுகள் கோரிக்கை

கோப்பாய் குறூப் நிருபர்



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் விடுதலைக்கு வட மாகாண ஆளுநர் உதவ வேண்டுமென வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக உறவுகள் நேற்று (12) திங்கட்கிழமை உண்ணா விரதப்போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தில் கலந்து கொண்ட உறவுகள் கருத்து தெரிவிக்கும் போது,

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் தமது உறவுகளை தொடர்ச்சியாக தடுத்து வைத்துள்ளனர். இவ்வாறான நிலையில் சிறைச்சாலையில் 13 தமிழ் கைதிகள் தொடர்ச்சியாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வடமாகாண ஆளுநர் தமது உறவுகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

## வட்டுக்கோட்டையில் பூசணிக்காய் திருட்டு; ஒருவர் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்.வட்டுக்கோட்டை பகுதியில் 40 கிலோ பூசணிக்காயை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டமொன்றில் 40 கிலோ பூசணிக்காய் திருடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

வட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள மூளாய் பகுதியில் நபரொருவர் 40 கிலோ பூசணிக்காயை கிலோ 70 ரூபாய் வீதம் விற்பனை செய்ததாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் , பூசணிக்காயை விற்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பகிடிவதை குற்றச்சாட்டில் கைதான மாணவனுக்கு விளக்கமறியல் உத்தரவு

யாழ்.விசேட நிருபர்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவனை பகிடிவதைக்குட்படுத்தி தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாணவனை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்திர விட்டுள்ளது. யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியை சேர்ந்த ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக முதலாம் வருட மாணவனை, அதே பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவர்கள் கொக்குவில் பகுதிக்கு அழைத்து பகிடிவதைக்குள்ளாக்கி, தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், இரண்டாம் வருட மாணவனை பொலிஸார் கைது செய்து யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். அதேவேளை மாணவனை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கிழக்கின் குரல்

## ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தேரோட்டம்

(மட்டக்களப்பு விஷேட நிருபர்)



பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வர் ஆலய வருடாந்த தேரோட்டம் ஞாயிற்றுக்கிழமை (11) மாலை நடைபெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு. சச்சிதானந்தக் குருக்கள் தலைமையில் இது நடைபெற்றது. வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சுமார் 2000 வருடங்கள் பழமை வாய்ந்த சித்திர கட்டுத் தேரினிலே பிள்ளையார் மற்றும் சிவன், பார்வதி சுவாமிகள் ஆரோகணித்ததும் தேரோட்டம் ஆரம்பமானது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டு, வடம்பிடித்திழுத்து தங்களது நேர்த்திகளை நிறைவேற்றினர்.

## பெண் கைதி உட்பட 29 பேர் விடுதலை

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று (12) மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து ஒரு பெண்கைதி உட்பட 29 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் விடுதலை நிகழ்வில்,பிரதம அதிகாரி எம்.மோகன்தாஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சிறு குற்றம் புரிந்த, தண்டப் பணம் செலுத்தாத கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

# ஆங்கிலம், தொழினுட்ப அறிவுகளால் நவீன சவால்களை வெல்வதற்கு தயாராக வேண்டும்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



நவீன சமுதாயத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் தொழில் நுட்பத்தையும், ஆங்கிலத்தையும் மாணவர்கள் சரளமாகக் கற்றுக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும். அதிலும் பல்கலைக்கழகம் பிரவேசிக்கும் மாணவர்கள் இந்த இரண்டு துறைகளையும் மிகக் கண்டிப்பாக கற்றுக்கொள்ள வேண்டுமென,அக்கரைப்பறு வலயக் கல்விப்பணிப்பாளர் அஷ்ஷேய்க் ஏ.எம். ரஹுமதுல்லாஹ் தெரிவித்தார்.

பல்கலைக் கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட செயலமர்வில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அக்கரைப்பற்று "பைத்துல் ஹிக்மா' கல்விமேம்பாட்டு ஒன்றியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வு அஸ்சிராஜ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அஷ்ஷேய்க் ஏ.எம். ரகுமதுல்லாஹ் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு உரையாற்றிய அவர்,நவீன உலகின் சவால்களை வெல்வதறக்கு மாணவர்கள் ஆங்கிலம்,தெழினுட்பம் என்பவற்றில் தேர்ச்சி பெறல் அவசியம்.மேலும் ஆன்மீகத்திலும் முக்கிய கவனம் செலுத்துவதுாடாகவே.மோணவர்களின் கல்வி ஒழுக்கம் நிறைந்து பூரணத்துவம் அடையும் என்றார்.

ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி ஹனிபா இஸ்மாயில் தலைமையில் இந்நகிழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்றில் இம்முறை மருத்துவ துறைக்கு தெரிவாகியுள்ள 14 மாணவர்கள், பொறியியல் துறைக்கு தெரிவான 04 மாணவர்கள் உட்பட பல்கலைக்கழகம் தெரிவான மொத்தம் 62 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், எதிர்வரும் காலங்களில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் ஜி. குணபாலன், தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி கலாநிதி யு.எல். செய்னுடீன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எம்.சித்தி பாத்திமா மற்றும் ஏ.ஜி.பஸ்மில் ஆகியோர் முறையே மருத்துவம், பொறியியல், வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம், கலைத்துறை போன்றவைகள் தொடர்பாக விளக்கினர்.

## டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்த பிரதேசங்களைச் சுத்தப்படுத்தும் பணிகள்

(கல்குடா தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குநோய் பரவல் அதிகரித்து வருவதால், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலுள்ள பகுதிகளில், டெங்கு தாக்கம் பரவாத வகையில், பிரதேசங்களைச் சுத்தப்படுத்தும் பணிகள் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக்கின் தலைமையில் இடம்பெறுகின்றன. மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல். நௌபர் தலைமையிலான சுகாதார பிரிசோதகர்கள், அலுவலக டெங்கு பிரிவு உத்தியோகத்தர்கள், ஓட்டமாவடி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் வீடு, வீடாகச்சென்று டெங்கு பரவும் இடங்களை நேற்று பரிசோதனை செய்தனர். இதன்போது, டெங்கு பரவும் வகையில் பொருட்களை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டதுடன், அப்பொருட்கள் ஓட்டமாவடி பிரதேசசபை உத்தியோகத்தர்களால் அகற்றப்பட்டன.

## ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீடு படிவத்தை பூர்த்தி செய்யுமாறு கோரிக்கை

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

ஆசிரியர்கள் இவ்வருடம் செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்த ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு படிவத்தை பூர்த்திசெய்து அதிபர்களிடம் ஒப்படைக்குமாறு கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹ்துல் நஜீம் கேட்டுள்ளார்.

கொரோனாத்தாக்கம், பொருளாதார நெருக்கடிகளால் பாடசாலைகள் நீண்டகாலம் மூடப்பட்டன. இதனால், பொதுப்பரீட்சை முடிவுகளில் எதிர்பார்த்த அடைவை மாணவர்கள் பெறவில்லை. இந்நிலைமைகளை எதிர்காலத்தில் இல்லாதொழிக்கும் நோக்குடனே, இத்திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

வருடாந்த சம்பள உயர்ச்சிக்கு விண்ணப்பிக்குபோது செயலாற்றுகை தரக்கணிப்பீட்டுப் படிவம் இணைக்கப்படல் வேண்டுமெனவும், தவறின் சம்பள உயர்ச்சி வழங்கப்படமாட்டாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அடுத்தவாரம் முதல்

கோட்டமட்ட ரீதியான பாடசாலை விஜயங்கள் முகாமைத்துவத்துக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் முஹம்மது பௌஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

## ஐஸ் போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் கைது.

(கிண்ணியா மத்திய நிருபர்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, நடுஊற்று பகுதியில் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவரை திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் நேற்று (12) காலை கைது செய்துள்ளனர்,

கைதான நபர்களிடமிருந்து 7.041 கிராம் நிறைகொண்ட ஐஸ் போதைப்பொருள் பொதி கைப்பற்றப்பட்டது.சந்தேக நபரை, கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

# இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின்
# 72 ஆவது தேசிய மாநாடு










இலங்கையில் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் மனித வள மேம்பாட்டையும் விருத்தி செய்ய அகில இலங்கை வை. எம்.எம்.ஏ பேரவைக்கு அமெரிக்க உயர்ஸ்தானிகராலயம் தொடர்ந்து ஒத்துழைப்பையும் நல்லாதரவையும் வழங்கும் என்று அமெரிக்க உயர்ஸ்தானிகர் ஜுலி ஜே.சங் தெரிவித்தார்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 72 ஆவது தேசிய மாநாடு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அமெரிக்க உயர்ஸ்தானிகர் ஜுலி ஜே.சங் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் துருக்கி நாட்டின் உயர்ஸ்தானிகர் மற்றும் இந்தியா உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் பிரமுகர் பானு பிரகாஸ், இந்தோநேசியா, சீன, மலேசியா உள்ளிட்ட பல நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரிகள் என பெரும் எண்ணிக்கையான பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அமெரிக்க உயர்ஸ்தானிகர் மேலும் உரையாற்றும் போது,...

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு இலங்கையின் விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அண்மையில் 1.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளோம்.கண்டியிலுள்ள பெண்கள் நிறுவனம் ஒன்றின் ஊடாக விவசாயச் செய்கை, உரம் போன்றவற்றை ஊக்குவிப்பதற்காக இந்த நிதி உதவிகளை வழங்கியுள்ளோம் அதே போன்று வை.எம்.எம்.ஏ இனரின் இளம் தலைமைத்துவ முயற்சிகளுக்கும் தொடர்ந்து பங்களிப்பு நல்கவுள்ளோம் என்றார்.

இதன் போது கௌரவ அதிதியாக அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, போசகர்களான ரஸ்ஸான் மௌலானா, நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் தலைவர் காதர். எம். அலி, பொதுச் செயலாளர் ஹாசிப் சுக்ரி, பொருளாளர் யூ.எல். பாசில் ஆகியோரும் பங்கேற்றனர்.

இம்மாநாட்டில் நாட்டுக்காக அர்ப்பணிப்போடு சேவை செய்த இருவர் 'வை பேசனாலிட்டி' என்ற பெயரில் தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். 'எக்ஸ் போ லங்கா ஹோல்ட்டிங்' குழுமத்தின் தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான ஹனீப் யூசுப். தேர்தல் காண்காணிப்புகளில் ஈடுபட்டு வரும் 'பெப்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி ஆகிய இருவர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சமூக சேவைப் பணிகளில் ஈடுபடுகின்ற என்ற வகையில் ஜே.ஜே. பவுண்டேசன் பணிப்பாளர் டாக்டர் ஐ. வை. எம். ஹனீப் அவர்களுக்கு விசேட விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம்.எம்.ஏ. பேரவையின் சஹீட் எம். ரிஸ்மி தலைமை உரையாற்றும் போது,....

அமெரிக்க உயர்ஸ்தானிகராலயத்திற்கும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவைக்குமிடையிலான நட்புறவு இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய நிதி ஒதுக்கீட்டின் மூலம் எதிர்கால இளம் தலைமைத்துவங்கள் உருவாக்குவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வேலைத் திட்டத்தில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள் இதில் கலந்து பயன்பெற்றார்கள். இவை மூன்று தடவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் சர்வதேச மட்டத்திலுள்ள பிரபல்யமான வளவாளர்கள் இந்தச் செயலமர்வுகளில் கலந்து கொண்டனர். இதன் மூலம் நிறைய மாணவர்கள் பயன்பெற்றுள்ளார்கள். இந்த செயலமர்வின் மூலம் இரு வாலிபர்கள் அமெரிக்காவுக்கு பயிற்சிக்கும் சென்றுள்ளனர்.

அவை மட்டுமல்ல இந்நாட்டில் சிறுபான்மையின மக்களுக்கு இடையூறுகள் ஏற்படும் போதெல்லாம் எமது பிரச்சினைகளை தொடர்பில் அவர்களிடம் முறையீடுகளை முன்வைத்த போது அவர்கள் எங்களோடு நெருங்கிப் பழகி எமது பிரச்சினைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தினார்கள். அவற்றுக்கு வை. எம். எம். ஏ. பேரவை நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது.

2014 இல் அமெரிக்கா உயர்ஸ்தானிகர் மீச்சல் சிசன் கண்டியிலுள்ள 'வை' இல் ஆரம்பிக்கின்ற இளைஞர் அமைப்புக்களை ஒரு பொதுவான அமைப்பொன்றாக உருவாக்கினார். இதற்கு '6 வை 6 வை' என்ற பெயர் இடம்பெற்றது.

வை.எம்.சி.ஏ., வை.எம்.பி.ஏ, வை. எம்.எம்.ஏ., வை.எம்.எச்.ஏ., வை. டப்ளியு. பி.ஏ, வை.டப்ளியுசி.ஏ. முதலிய இளம் பெண்கள் வாலிய சங்கங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். அதேவேளையில் அவர் கண்டி வை.எம்.எம்.ஏ. கிளை அலுவலகத்தில் 'டெபோடின்ஸ்' என்ற ஒரு மாற்றுத் திறனாளி நிலையத்தையும் திறந்து வைத்தார். இன நல்லிணக்க செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக செயற்பட்டார். அக்கால கட்டத்தில் நான் மாவட்டப் பணிப்பாளராக கடமையாற்றினேன். அவை மட்டுமல்ல என்னுடைய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பணியாகும்.

எதிர்காலத்திலும் கல்வி, கலாசார, சமூக மேம்பாடுகளுக்காக பல்வேறு பங்களிப்புச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினையும் விடுப்பதாக அவர் அன்று தெரிவித்தார்.

எமது சமூகத்தின் பிரச்சினைகளை பற்றி கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம். அந்தக் கலந்துரையாடல்களில் அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் கலந்து கொண்டு நல்ல வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி வரும் ஒருவர். அவர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுவதில் நாம் பெருமிதம் அடைகிறோம்.

வை. எம். எம். ஏ. பேரவையின் 72 மாநாட்டில் நாம் அனைவரும் கலந்து கொண்டிருக்கிறோம். இவ்வமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்ற காலத்தில் முதலில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா தொற்று நோய், பின்பு இந்நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் போன்ற சவால்களை எதிர் கொண்டோம். இத்தகைய கால கட்டத்திலும் எமது செயற்றிட்ட நடவடிக்கைகளை எந்தப் பின்னடைவுகளும் இல்லாமல் செய்யக் கூடியதாக இருந்தது.

என்னுடைய காலத்தில் 150 க்கும் மேற்பட்ட கிளைகளை மேலும் விஸ்தரித்து இவ்வியக்கத்தின் பால் இளைஞர்களை ஈர்க்கச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளோம். குறிப்பாக இவ்வமைப்பின் எல்லா கிளைகளும் ஒரு சுயமாகச் செயற்படக் கூடிய நிலையை உருவாக்கியுள்ளேன். அதே வேளையில் களுத்துறை மாவட்டத்தில் எமது அமைப்பின் ஊடாக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை உருவாக்கியுள்ளோம். மாவட்டப் பணிப்பாளர்களும் பலப்படுத்தப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கான விருது இந்த மேடையில் வழங்கப்பட்டன இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய மாவட்டப் பணிப்பாளர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் இருந்து நாடும் நாட்டு மக்களும் வெளியே வருவதற்காக நாம் எல்லோரும் ஒத்துழைப்பும் நல்லாதரவும் பங்களிப்பும் நல்க வேண்டும். குறிப்பாக இங்கு பல்வேறு நாடுகளின் உயர்ஸ்தானிகரகத்தின் பிரதிநிதிகள் வந்துள்ளார்கள். அவர்கள் எமது நாடு பொருளாதார நெருக்கடியான நிலையில் இருந்து விடுபடுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கையொன்றை விடுக்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது வருடா வருடம் சிறப்பாக செயலாற்றிய வை.எம்.எம்.ஏ. கிளைகளுக்கிடையே விண்ணப்பம் கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட கிளைகளுக்கு அமெரிக்க உயர்ஸ்தானிகரால் விசேட விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

சிறந்த இளைஞராகத் தெரிவு செய்யப்பட்டவர் முப்தி முயீன், (களுத்துறை வை.எம்.எம்.ஏ) நாட்டை கட்டி எழுப்பும் செயற்றிட்டத்தின் கீழ் இரத்ததானம் வழங்குதல், மரம் நடுதல், சிரமதானம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்கான சிறந்த விருது வை. எம்.எம்.ஏ. மடவளை, சமூக மற்றும் தேசிய விவகாரங்களுக்கு பங்களிப்புச் செய்த சிறந்த கிளை வை.எம்.எம்.ஏ. கொழும்பு மத்தி.

போதைப் பொருள் மற்றும் புகைத்தல் தடுப்பு செயற்றிட்டத்திற்கான சிறப்பு விருது வை.எம்.எம்.ஏ கல்ஹின்னை, சிறந்த பொருளாளர் இல்ஹாம் அலி வை.எம்.எம்.ஏ. பதுளை, சிறந்த செயலாளர் எம்.எஸ்.ஏ. நூர்தீன் கட்டுக்கலை வை.எம்.எம்.ஏ., சிறந்த தலைவர் ராயிஸ் முஸ்தபா கட்டுக்கலை வை. எம்.எம்.ஏ., சிறந்த விளையாட்டுத் துறை விருது மஹிய்யாவ வை.எம். எம்.ஏ., சிறந்த முன்பள்ளிப் பாடசாலைக்கான விருது மடவளை வை.எம். எம்.ஏ., விசேட செயற்றிட்டத்திற்கான விருது கட்டுக்கலை வை.எம்.எம்.ஏ., சிறந்த மாவட்டப் பணிப்பாளருக்கான விருது முஹமட் ஹுஸைன்டீன் இஹ்திசான் கண்டி மாவட்டம், சிறந்த கிளைகளுக்கான விருது பதுளை வை.எம். எம்.ஏ. ஆகிய கிளைகளுக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இக்கால கட்டத்தில் ஏனைய காலங்களை விட திறம்படச் செயலாற்றியமைக்கான பல்வேறு விருதுகள், பல கிளை அமைப்புக்களினால் சஹீட் எம். ரிஸ்மி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நிதி சேகரிப்பு விடயத்தில் பங்களிப்புச் செய்த முன்னாள் தலைவரான ஜிப்ரி ஹனிபா, கே. என். டீன் ஆகிய இருவரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அதேவேளை இருவருடம் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவராக குறித்த காலம் வரையிலும் கடமையாற்றி விட்டு ஓய்வு பெற்றுச் செல்லும் சஹீட் எம். ரிஸ்மிக்கு மாவட்ட மட்டத்திலுள்ள ஏ வை. எம்.எம்.ஏ. கிளைகளின் பிரதிநிதிகளினால் வேறு எந்தத் தலைவர்களுக்கும் இல்லாதவாறு பாராட்டுக்களும், விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வை.எம்.எம்.ஏ அங்கத்தவர்கள், மாவட்டப் பணிப்பாளர்கள், வை. டப்ளியூ. எம்.ஏ உறுப்பினர்கள், ஏனைய சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பெரு எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது நடப்பு வருட நிர்வாகிகளாக இஹ்சான் ஹமீட் தலைவராகவும் பொதுச் செயலாளராக பர்ஹாஸ் பாரூக், பொருளாளராக என்.எம். நிவ்ராஸ், உப தலைவராக எஸ் தஸ்தகீர், யூ.எல். பாசில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் ஒவ்வொரு மாநாட்டிலும் வெளியிடப்படும் 'சுப்பான்' எனும் மலர் வெளியிடப்பட்டது. அதில் லேக் ஹவுஸ் வெளியீடான தினகரன் பத்திகையின் அனுசரணையுடன் இக்பால் அலி எழுதிய ' இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்' நூல் பற்றிய அறிமுகம், வை.எம்.எம்.ஏ செயற்பாடுகள் தொடர்பிலான மலர் இங்கு வெளியிடப்பட்டது.

இக்பால் அலி




# ஆசியக் கிண்ண வெற்றி இலங்கை கிரிக்கெட்டின் பெரும் திருப்புமுனை

## அணித் தலைவர் தசுன் ஷானக்க நம்பிக்கை



டி20 உலகக் கிண்ணப் போட்டியை எதிர்நோக்கி இருக்கும் நிலையில் ஆசிய கிண்ணத்தை வென்றிருப்பது இலங்கை கிரிக்கெட்டின் திருப்புமுனை என்று இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்க குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இலங்கை அணி ஆறாவது முறையாக ஆசிய கிண்ணத்தை கைப்பற்றியது.

இந்த வெற்றியை இலங்கைக்கு அர்ப்பணிப்பதாக போட்டிக்குப் பின்னரான செய்தியாளர் சந்திப்பில் ஷானக்க தெரிவித்தார்.

"எமது வீரர்கள் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக நன்றாக ஆடியபோதும் வெற்றிகளைப் பெற முடியாமல் இருந்தது. இந்த வெற்றி எமது கிரிக்கெட்டின் பெரும் திருப்புமுனையாக உள்ளது. இந்த அணியால் அடுத்த ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு தொடர முடியும். இது எமக்கு நல்ல செய்தியாக உள்ளது" என்று ஷானக்க தெரிவித்தார்.

முதலில் துடுக்கெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி 58 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியபோதும் மத்திய வரிசையில் வந்த பானுக்க ராஜபக்ஷ அபாரமாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் இலங்கை 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய பாகிஸ்தான் அணி இலங்கையின் சிறந்த பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு காரணமாக 20 ஓவர்களில் 147 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் இலங்கை அணியின் வெற்றிக்கு உதவிய பானுக்க ராஜபக்ஷ ஆட்ட நாயகனாக தெரிவானார்.

"இரண்டு தசாப்தங்களுக்கு முன் இலங்கை அணியில் ஆக்கிரமிப்பான ஆட்டம் ஒன்றை பார்க்க முடிந்தது. அதனை மீண்டும் ஏற்படுத்துவதே எமக்குத் தேவையாக உள்ளது. அணி ஒன்றாக அதனை நாம் நன்றாகச் செய்து கொண்டிருப்பதாக நாம் நினைக்கிறோம். நாடொன்றாக நாம் பெற்ற மிகப்பெரிய வெற்றியாக இது உள்ளது. இது இலங்கைக்கு மிகக் கடினமான காலம். பல பிரச்சினைக்கு இடையே சிக்கி இருக்கும் இந்த நேரத்தில் மக்களின் முகத்தில் புன்னகை ஒன்றை கொண்டுவர முடிந்தது பற்றி நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்" என்று பானுக்க ராஜபக்ஷ தெரிவித்தார்.







44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..........................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை :..........................

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை :..........................

வாக்களித்தவர் பெயர் :..........................

முகவரி :..........................

மொபைல் இல. :..........................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 17-09-2022 இல. 25






18 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவு மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ள மட்டக்களப்பு குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலய மாணவிகளை படத்தில் காணலாம். படம்: பாண்டிருப்பு தினகரன் நிருபர்

## சம்மாந்துறை எஸ்.எஸ்.சி கழகம் சம்பியனாக தெரிவு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று றஹ்மிய்யா விளையாட்டுக் கழகத்தின் 16ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிழக்கிலங்கையில் உள்ள சிறந்த 60 கிரிக்கெட் அணிகள் கலந்து கொண்ட இரவு நேர மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சம்பியனாக சம்மாந்துறை எஸ்.எஸ்.சி விளையாட்டு கழகம் தெரிவானது.

பள்ளிக்குடியிருப்பு அதாஉல்லா விளையாட்டு மைதானத்தில் பல நாட்களாக நடைபெற்று வந்த இச்சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வு வெள்ளிக்கிழமை (09) இரவு கழகத்தின் தலைவர் ஏ.எம். சஹீட் ஜே.பி தலைமையில் நடைபெற்றது.




## இலங்கை லெஜன்ட்ஸ் அபார வெற்றி

இந்தியாவில் நடைபெற்று வரும் வீதிப் பாதுகாப்பு உலகத் தொடரில் அவுஸ்திரேலிய லெஜன்ட்ஸ் அணிக்கு எதிரான தனது முதல் போட்டியில் அதிரடி ஆட்டத்தை வெளிக்காட்டிய இலங்கை லெஜன்ட்ஸ் அணி 38 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

கான்பூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை லெஜன்ட்ஸ் அணிக்கு அதன் தலைவர் திலகரத்ன டில்ஷான் 56 பந்துகளில் 107 ஓட்டங்களை விளாசியதோடு அவருடன் ஆரம்ப வீரராக வந்த டில்ஷான் முனவீர 63 பந்துகளில் ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களை பெற்றார்.



இதன்மூலம் இலங்கை லெஜன்ட்ஸ் 20 ஓவர்களுக்கும் 1 விக்கெட்டை இழந்து 218 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய அவுஸ்திரேலிய லெஜன்ட்ஸ் அணி 18 ஓவர்களில் 180 ஓட்டங்களுக்கு சுருண்டது. நுவன் குலசேகர 4 விக்கெட்டுகளை வீழ்ந்தினார்.

# சர்வதேச செய்திகள்

## பிரிட்டிஷ் மன்னரிடமிருந்து விலக அன்டிகுவாவில் சர்வஜன வாக்கு



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவை அடுத்து ஒரு குடியரசாக மாறுவது பற்றி அன்டிகுவா மற்றும் பார்புடாவில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவிருப்பதாக அந்நாட்டு பிரதமர் கஸ்டோன் பிரவுன் தெரிவித்துள்ளார்.

இந்த சர்வஜன வாக்கெடுப்பு அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நடத்தப்படும் என்றும் இது ஒரு விரோதச் செயல் அல்ல என்றும் அவர் வலியுறுத்தினார். மன்னர் மூன்றாம் சார்ல்ஸ் நாட்டின் அரச தலைவர் என்பதை உறுதி செய்யும் அறிவிப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் அடுத்து நான்கு ஆண்டுகளுக்குள் இவ்வாறான வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படமாட்டாது என்று அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

அன்டிகுவா மற்றும் பார்புடா 1981இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றபோதும் பொதுநலவாயத்தில் இருக்கும் 15 நாடுகளில் ஒன்றாக உள்ளது. இந்த நாடுகள் பிரிட்டனின் மன்னரை தங்கள் அரச தலைவராக பகிர்ந்துகொள்கின்றன.

## இருளில் மூழ்கியது கிழக்கு உக்ரைன்



உக்ரைன் படையினரின் தாக்குதலில் ரஷ்ய துருப்புகள் பின்வாங்கிய நிலையில் ரஷ்யா நடத்திய பதில் தாக்குதலை அடுத்து கிழக்கு உக்ரைனில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் இரண்டாவது மிகப் பெரிய நகரான கார்கிவில் உள்ள நீர் வசதிகள் மற்றும் அனல் மின் நிலையம் ஒன்றின் மீது வேண்டுமென்று தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டதாக உக்ரைன் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மக்களுக்கு வெளிச்சம் மற்றும் வெப்பத்தை இல்லாமல் செய்வதற்காகவே தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி குற்றம்சாட்டியுள்ளார்.

கிழக்கு உக்ரைன் பிராந்தியத்தில் ரஷ்ய கட்டுப்பாட்டு பகுதிகள் உட்பட சுமார் ஒன்பது மில்லியன் மக்கள் வசிக்கின்றனர்.

உக்ரைன் படை வார இறுதியில் நடத்திய பதில் தாக்குதல்களில் நாட்டின் கிழக்கு பகுதியில் 3,000க்கும் அதிகமான சதுர கிலோமீற்ற நிலத்தை ரஷ்யாவிடம் இருந்து மீட்டதாக செய்தி வெளியான நிலையிலேயே ரஷ்யா இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகில் நீண்ட காலம் ஆட்சி புரியும் மன்னராக புருணை சுல்தான் சாதனை



பிரிட்டனின் எலிசபெத் மகாராணி காலமானதை அடுத்து, புருணை சுல்தான் ஹசனல் போல்கியா உலகில் நீண்ட காலத்திற்கு ஆட்சி செய்துவரும் மன்னராகியுள்ளார்.

1967ஆம் ஆண்டு மன்னரான அவர் சுமார் 55 ஆண்டுகளாக ஆட்சி செய்துவருவதாக பெர்னாமா செய்தி நிறுவனம் கூறியது.

எலிசபெத் மகாராணியின் ஆட்சி 70 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது. கடந்த வியாழக்கிழமை (08) அவர் காலமானார். அவரின் பூதவுடலை தாங்கிய பேழை ஸ்கொட்லந்தில் உள்ள பால்மோரலிலிருந்து நகரங்கள், கிராமங்கள் வழி கொண்டு செல்லப்பட்டு வருகிறது. எலிசபெத் மகாராணியின் மகனான இளவரசர் சார்ல்ஸ் பிரிட்டனின் புதிய மன்னராக அரியணை ஏறியுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.